வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 09.06.2022 வியாழக்கிழமை | இதழ் : 191 | பக்கங்கள் : 16

# மின் தடை எந்தவேளையும் நாடு முழுவதும் ஏற்படலாம்

## மின்சார சபை பொறியியலாளர்கள் நள்ளிரவு முதல் பணி புறக்கணிப்பு

கொழும்பு, ஜூன் 09

இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் நேற்று நள்ளிரவு முதல் பணிப் புறக்கணிப்பில் குதித்துள்ளனர். இதனால், இன்று காலை முதல் எந்த வேளையிலும் மின் தடை ஏற்படலாம் என்று மின்சார பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்று வியாழக்கிழமை இலங்கை மின்சக்தி திருத்தச் சட்ட மூலம் பாரா

15

# மின்சார விநியோகம் அத்தியாவசிய சேவை!

## பிரகடனப்படுத்தினார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 09

மின்சார விநியோகத்தை அத்தியாவசிய சேவையாக பிரகடனப் படுத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் நேற்று நள்ளிரவு முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். இந்நிலையில், அதற்கு முன்னதாக ஜனாதிபதியின் வர்த்தமானி

15



# பதவி துறக்கிறார் பஸில் ராஜபக்ஷ? இவ்வாரம் அமெரிக்கா பறக்கிறார்?

கொழும்பு, ஜூன் 09

**முன்னாள் நிதியமைச்சரான பஸில் ராஜபக்ஷ இன்றைய தினம் தனது பாராளுமன்ற உறுப்புரிமையை துறக்கவுள்ளார் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மிக முக்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.**

இதனிடையே, பாராளுமன்ற உறுப்புரிமையைத் துறக்கும் பஸில் ராஜபக்ஷ இந்த வார இறுதியில் அமெரிக்கா செல்லவுள்ளார் என்று பிரபல சிங்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுநரான பஸில் ராஜபக்ஷ இரட்டைப் பிரஜாவுரிமையை கொண்டிருந்தமையால் பாராளு

15

# ஆசிரியர் சேவைக்கு 22 ஆயிரம் பட்டதாரிகள்!

## அமைச்சரவை அனுமதி என்கிறார் சுசில்

கொழும்பு, ஜூன் 09

எதிர்காலத்தில் 22 ஆயிரம் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

2018, 2019, 2020 பட்டமளிப்பு திட்டத்தின் கீழ் தற்போது அரச சேவைக்கு ஆள்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள 35 வயதுக்கு உட்பட்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (ஐ)

# நாட்டின் கடனை தமிழர் செலுத்தினால் அரசியல் தீர்வு தர அரசாங்கம் தயாரா?

## சிறீதரன் எம். பி. சபையில் கேள்வி

கொழும்பு, ஜூன் 09

நாட்டின் 50,000 மில்லியன் ரூபாய் கடனை செலுத்த 13 இலட்சம் புலம்பெயர் தமிழர்கள் தயாராக வந்தால் வடக்கு, கிழக்கிலும் மலையகத்திலும் அரசியல் தீர்வை பெற்றுத் தர அரசு தயாரா? என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் நேற்று சபையில் கேள்வி எழுப்பினார்.

பட்டினியை இல்லாமல் செய்வதற்கு நாங்களும் உங்களுடன் கரங்கோக்க தயாராக இருக்கிறோம். அதற்காக நீதியான முறையில் இனப்பிரச்னை தீர்வுக்கு அரசாங்கம் முன்வந்தால், நாட்டை சிங்கப்பூராக மலேசியாவாக மாற்றலாமெனவும் அவர் தெரிவித்தார்.

பாராமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

15

# யாழ். வரும் ஒவ்வொரு ரயிலுக்கும் ரூ. 3 இலட்சம் அரசுக்கு நட்டமாம்

கொழும்பு, ஜூன் 09

யாழ்ப்பாணத்துக்கான தொடருந்து சேவையால் ஒவ்வொரு ரயிலுக்கும் 3 இலட்சம் ரூபாய் அரசுக்கு நட்டம் ஏற்படுகிறது என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அவர், புகையிரதக் கட்டணத்தை பஸ் கட்டணத்தில்

15

# பாராளுமன்றத்தை கலையுங்கள் அது ஆணையை இழந்துவிட்டது!

## சுமந்திரன் எம். பி. வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 09

பாராளுமன்றம் தனது ஆணையை இழந்துள்ளது. இதனால் அது கலைக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், தற்போது அரசாங்கத்திலும், வெளியிலும் தங்களை சுயாதீன எம். பிக்கள் என்று கூறும் பல குழுக்கள் உள்ளன. எனவே, பாராளுமன்றத்தில் அரசாங்க தரப்பு, எதிர் தரப்பு என்று அழைக்கப்பட முடியாது.

இந்தப் பாராளுமன்றம், சுயாதீனமாக இயங்கும் எம். பிக்களையே கொண்டுள்ளது. இது ஒரு புதிய 'வழக்கம்' (fashion). இலங்கை பாராளு

11

# 3900 தொன் எரிவாயு நேற்று வந்தது

கொழும்பு, ஜூன் 09

3,900 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய மற்றொரு கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

மீதமுள்ள 2.5 மில்லியன் டொலர் கட்டணத்தை செலுத்தி எரிவாயுவை தரையிறக்குவதற்கு நடவடிக்கை நேற்று எடுக்கப்பட்டது.

இதனூடாக மேலும் 6 நாட்கள்

11

# நாட்டைவிட்டு சட்டவிரோதமாக எவரும் வெளியேற வேண்டாம்!

## பிரதமர் மக்களிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 09

இலங்கையிலிருந்து எவரும் சட்ட விரோதமாக வெளியேற வேண்டாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் புதன்கிழமை கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மைய நாட்களாகக் கடல் வழியாகச் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது எனவும், அவர்களில் பலர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் மக்கள் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். இவர்களில் கடல் மார்க்கமாகச் சென்ற பலர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி

15

## இப்படியும் நடக்கிறது...!

ஏற்கனவே இந்தப் பத்தியில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

இரண்டு கோடி மக்கள் தொகையைக்கொண்ட நாட்டில் பன்னிரண்டு லட்சம் பேர் அரச உத்தியோகத்தர்களாக இருக்கின்றார்கள் என்றும், அரச ஊழியர்கள் தொகையை குறைக்கவேண்டும் என்பதும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் ஒன்று என்பதையும் அதில் குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இப்போது, அரசாங்கம் மூன்று லட்சம் அரச ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றது.

அதன் முதல்கட்டமாக இப்போது, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்கு செல்லவிருக்கும் அரசாங்க ஊழியர்களை பதிவுசெய்யும் பணியைத் தொடங்கியிருக்கின்றது.

இவ்வாறு செல்ல விரும்புபவர்களுக்கு ஐந்து வருடங்களுக்கு சம்பளமற்ற லீவை வழங்க முதல்கட்டமாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எத்தனைபேர் விடுமுறையில் செல்கிறார்கள் என்பதைப் பார்த்து, மற்றவர்கள் மீது கைவைக்கலாம் என்று அரசாங்கம் கணக்குப்போட்டிருக்கலாம்.

சர்வதேச நாயண நிதியம் எதிர்பார்ப்பதுபோல, குறைக்கவேண்டிய அரச ஊழியர்கள் மூன்று லட்சம் பேரும் தாமாகவே சம்பளமற்ற லீவில் வெளிநாடு சென்றுவிட்டால், ஊழியர்களை குறைக்கவேண்டிய தேவை அரசுக்கு ஏற்படாமலும் போகலாம்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையும் எரிபொருள், எரிவாயு பற்றாக்குறை, அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் என்பன ஏற்கனவே பலரை நாட்டைவிட்டு வெளியேறச் செய்திருக்கின்றன.

தினமும் பல ஆயிரக்கணக்கானவர்கள் பாஸ்போர்ட் பெறுவதற்காக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தை முற்றுகையிட்டு வருகின்றனர் என்று செய்திகள் வெளிவருகின்றன.

திறமையான இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கவலை வெளியிட்டிருக்கின்றார்.

வடக்கு கிழக்கில் யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது, வெளியேறிய தமிழ்ப் புத்திஜீவிகளின் வெளியேற்றத்தால் ஏற்பட்ட வெற்றிடத்தை இன்றுவரை நிரப்பமுடியவில்லை. அவ்வாறு வெளியேறிய புத்திஜீவிகள் மீண்டும் தாயகம் திரும்பவோ அல்லது தமது 'புத்தியை' நாட்டுக்கு பயன்படுத்தவோ முன்வரவில்லை.

வடக்கு கிழக்கில் இன்றும் அதன் தாக்கம் தொடர்கின்றது. இந்த நிலையே எதிர்காலத்தில் முழுநாட்டிற்கும் ஏற்படப்போகின்றது என்பதையே சஜித்தின் எச்சரிக்கை புலப்படுத்துகின்றது.

அரச ஊழியர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னதாக தமக்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக வெளிநாடு சென்று பணியாற்றினால், அவர்களுக்கான சம்பளச் செலவை அரசாங்கம் மீதப்படுத்த முடியும், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையை ஏற்றுக்கொண்டதாகவும் ஆகும். இதனால் அதன் உதவியும் கிடைக்கலாம். அதேவேளை, அவர்கள் வெளிநாடுகளில் பணியாற்றுவதால் கிடைக்கும் வெளிநாட்டு வருமானமும் நாட்டின் டொலர் வருமானத்தை அதிகரிக்க உதவும்.

நாட்டில் இப்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை காரணம்காட்டி, நம்மவர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக அனுப்பிவைக்கவும் சிலர் முயன்றுகொண்டிருக்கின்ற செய்திகளும் ஆங்காங்கே வருகின்றன.

நாற்பது லட்சத்தை கட்டிவிட்டு சுவிசிற்கு போவதற்காக காத்திருக்கின்றனர் சிலர். அங்கு போனால் ஆறுமாதத்தில் இந்த நாற்பது லட்சத்தையும் உழைத்துவிடலாம் என்பது அவர்களின் கனவு.

நாட்டில் பொருளாதார நெருக்கடி, அதனால் அகதியாக வந்தோம் என்று சொன்னால் எந்த நாடும் உங்களை அகதியாக ஏற்கப்போவதில்லை. பொருளாதார நெருக்கடி ஏற்படத் தொடங்கியதும் ராமேஸ்வரம் கடற்கரையில் போய் இறங்கிய நம்மவர்களை இன்னமும் தினசரி உணவுகொடுத்து தமிழக அரசு கவனிக்கின்றதே தவிர, அவர்களை அகதிகளாக ஏற்றுக்கொண்டு, யுத்த காலத்தில் போய் இன்றுவரை வாழும் அகதிகள்போல, மத்திய அரசு அகதிகளாக ஏற்றுக்கொள்ளவில்லை.

பொருளாதார காரணங்களுக்காக எந்த நாடுமே நம்மை அகதிகளாக ஏற்றுக்கொள்ளமாட்டா. ஏஜன்சிக்காரர்கள் சொல்வதுபோல, சுவிசிற்கோ ஜெர்மனிக்கோ, பிரான்சுக்கோ போய் அகதி அந்தஸ்து கோரினால் சில மாதங்களில் அவை நிராகரிக்கப்பட்டு, நாட்டுக்கு திருப்பியனுப்பப்படும் நிலையும் ஏற்படலாம்.

வெளிநாடு செல்லவேண்டும் என்று நினைத்தால், தொழில் வாய்ப்பைப் பெற்று, உத்தியோகபூர்வமாக செல்லவேண்டுமே தவிர, இப்படி அகதியாக போகலாம் என்பதெல்லாம் ஏற்புடையதல்ல. விரைவில் மலேசியா சில லட்சம் பேருக்கு தொழில்வழங்க சம்மதம் தெரிவித்திருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுச நாணயக்கார தெரிவித்திருக்கின்றார். இதுபோல, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினூடாக பயணிப்பது பாதுகாப்பானது மாத்திரமல்ல, நாட்டுக்கும் உங்களுக்கும் நல்லது.!

- ஊர்க்குருவி

# அதிகாரங்களைக் குறைப்பதற்கு ஜனாதிபதி ஆதரவளிக்கவேண்டும்!

கொழும்பு, ஜூன் 09

நாட்டின் செல்வத்தை கொள்ளையடித்த அனைத்து தனிநபர்களுக்கும் எதிராக ஜனாதிபதி சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஓமல்பே சோபித தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்துள்ள அவர் இவ்வாறான நடவடிக்கைகள் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் ஜனாதிபதிக்கு அங்கீகாரத்தை கொண்டுவரும் எனவும் கூறினார்.

சோதிடர்கள், உறவினர்கள், ஊழல்வாதிகள், சுயநலம்மிக்க தனிநபர்களிடமிருந்து மாத்திரம் ஆலோசனைகளை ஜனாதிபதி பெற்றார் எனக் குறிப்பிட்டுள்ள ஓமல்பேதேரர், ஜனாதிபதி நிபுணர்கள் புத்திஜீவிகளின் கருத்துக்களை செவிமடுக்கத் தவறிவிட்டார் எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தவறான நடவடிக்கைகளை ஜனாதிபதி திருத்திக்கொள்ளவேண்டும். 20ஆவது திருத்தத்தின் மூலம் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை குறைக்கும் முயற்சிகளிற்கு ஜனாதிபதி ஆதரவளிக்கவேண்டும் மக்களின் ஆதரவை பெற்றுக்கொள்ளவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## கலைஞர்கள் ஒன்றுகூடல்

புதுக்குடியிருப்பு, ஜூன் 09

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தால் நடத்தப்படுகின்ற புதுக்குடியிருப்பு பிரதேச கலைஞர், எழுத்தாளர் ஒன்றுகூடல் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்த் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஒன்றுகூடலில் பிரதேச கலைஞர்களின் ஆற்றுகைகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச கலைஞர்கள், எழுத்தாளர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ரூபா வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை வெற்றி

### மத்திய வங்கி கூறுகிறது

கொழும்பு, ஜூன் 09

நாணய மாற்று விகிதங்களை மாற்றியமைக்கும் தீர்மானத்தை தொடர்ந்து ரூபாவின் மேலும் வீழ்ச்சியை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த நிலைமை சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்படிக்கையை எட்டுவதற்கான முன்னேற்றத்திற்கும் வழிவகுத்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு மார்ச் முதல் வாரத்தில், ரூபாயின் நெகிழ்வுத்தன்மை, 'நெகிழ்வான மாற்று விகிதத்தை' கடுமையாக வீழ்ச்சியடையச் செய்ததாக மத்திய வங்கி அறிவித்தது. (அ)

# கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 91 பேர் சிக்கினர்!

கொழும்பு, ஜூன் 09

கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்ற 91 பேர் மாரவில மற்றும் சிலாபத்தில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாரவில மற்றும் சிலாபம் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

மாரவில ஓய்வு விடுதியில் இருந்து 13 ஆண்கள், ஒன்பது வயது சிறுவன் மற்றும் கடத்தல்காரர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சிலாபம் கடற்பரப்பில் பல நாள் மீன்பிடி இழுவை படகு ஒன்றை கடற்படையினர் கண்காணித்து 58 ஆண்கள், 5 பெண்கள் மற்றும் 7 சிறுவர்கள் மற்றும் ஆறு கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, புத்தளம், கல்பிட்டி, சிலாபம், மாரவில மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். குறித்த குழுவினர் மேலதிக நடவடிக்கைகளுக்காக கொழும்பு துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# அரச எதிர்ப்பு போராட்டங்கள் இன்னமும் முடிவடையவில்லை

### சுட்டிக்காட்டுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன் 09

காலி முகத்திடலுக்கு மக்கள் வருகைத் தருவது கொஞ்சம் குறைவடைந்து விட்டதால், அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் போராட்டம் முடிவடைந்து விட்டதாக கருதக் கூடாது என்றும் மக்களின் அடுத்தக்கட்டப் போராட்டங்கள் சுனாமியின் தாக்கத்தைவிட தீவிரமாக இருக்கும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரண்டு வருடங்களாக நாட்டை நாசமாக்கிவிட்டு, இப்போது நாடு சிக்கலில் உள்ளது என ஆளும் தரப்பினர் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பிரதமராக ரணில் வந்தால், வெளிநாடுகளில் இருந்து உதவிகள் கிடைக்கும் என்றார்கள். ஆனால், எங்கே கிடைத்தது?

இனவாதத்தை பரப்பி பகைத்துக் கொண்டுள்ள மத்திய கிழக்கு நாடுகளுடன்தான் இறுதியாக பேச்சு நடத்த வேண்டியுள்ளது.

அந்த நாடுகளுடன் பேச்சு நடத்தி, உதவிகளைக் பெற்றுக் கொள்ளுங்கள். எண்ணெய்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

உலக வங்கியிடமிருந்து 79 மில்லியன் டொலரும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 83 மில்லியன் டொலரும் கிடைத்துள்ளன.

இதனை வைத்து உரம், எரிபொருள், எரிவாயு, மருந்துப் பிரச்னையை தீர்த்தால், மக்களுக்குள்ள சிக்கல் இல்லாது போய்விடும்.

நாடும் பழைய நிலைமைக்கு வந்துவிடும். சுற்றுலாப் பயணிகளும் மீண்டும் வர ஆரம்பித்துவிடுவார்கள். இதனால் மாதத்திற்கு 250 மில்லியன் டொலர் வருமானம் கிடைக்கும். இதனால் ரூபாயின் பெறுமதியும் உயரும்.

எனவே, முடியாது எனக் கூறிக்கொண்டிருக்காமல், செய்ய வேண்டிய விடயங்களை உடனடியாக செய்யுங்கள். மக்கள் திருடர்களை பிடிக்குமாறும் திருடப்பட்ட நிதியை நாட்டுக்குள் கொண்டு வருமாறும் கோருகிறார்கள்.

எனவே, புதிய பிரதமர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என கேட்க விரும்புகிறோம். -என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
09.06.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 26

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர்?

கூட்டமைப்பின் தலைமை - இப்படியொரு தலைப்பில் சிந்திக்க வேண்டியளவுக்கு நிலைமைகள் சென்றிருக்கின்றன. நாட்டில் பல்வேறு விடயங்கள் இடம்பெற்று வருகின்றன. அவற்றுக்கு மத்தியில், சுமந்திரனின் குரலை மட்டுமே கேட்க முடிகின்றது. சம்பந்தன் என்ன செய்கின்றார்? - அவர் எண்ணங்கள் எத்தகையன? - இந்தக் கேள்விகளுக்கான அவசியமேயில்லை என்பது போலவே கூட்டமைப்பின் நடவடிக்கைகள் இருக்கின்றன.

சம்பந்தன் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவராகவும் இருக்கின்றார். இந்த இரண்டு பொறுப்புக்களையும் நிர்வகிக்கக்கூடிய உடல்நிலையில் அவர் இல்லையென்பதே அவரின் ஆழ்ந்த அமைதிக்கான காரணம். இந்த நிலையில் செயல்பட முடியாமல் இருக்கின்ற சம்பந்தன் வகிக்கும் பாராளுமன்ற குழுத் தலைவர் பொறுப்பு பிறிதொருவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர்கள் கூடி ஆராய வேண்டும். அவர்களோ - சம்பந்தனை போலவே, ஆழ்ந்த அமைதியில் இருக்கின்றனர்.

உண்மையில் இன்றைய நிலையில், கூட்டமைப்பின் அடுத்த தலைமை தொடர்பில் - ஆகக் குறைந்தது ஓர் இணைத் தலைவரையாவது அறிவிக்க வேண்டும். ஆனால், அதைப் பற்றிய கரிசனை சம்பந்தனுக்கும் இல்லை - கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கும் இல்லை. கூட்டமைப்பின் அரசியல் அணுகுமுறைகளில் விமர்சனங்ளை முன்வைக்கும் புத்திஜீவிகள்கூட, கூட்டமைப்பின் இருப்பு முக்கியமென்பதை ஒப்புக் கொள்கின்றனர்.

ஏனெனில், கூட்டமைப்பு ஒன்றுதான் - இன்றைய நிலையில், தாராளவாத சர்வதேச சமூகத்துடன் உரையாடக்கூடிய ஒரேயோரு, தமிழ் தலைமையாக இருக்கின்றது. அதற்கான அங்கீகாரத்தை கொண்டிருக்கின்றது. அவ்வாறானதோர் அங்கீகாரத்துக்கு சம்பந்தனின் மிதவாத அரசியல் பின்னணியும் ஒரு காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், தனக்கு பின்னர், கூட்டமைப்பின் எதிர்காலம் தொடர்பில் சம்பந்தன் கரிசனையற்றிருப்பது ஆரோக்கியமான ஒன்றல்ல. ஒருவேளை இதனை செய்ய சம்பந்தனால் முடியாவிட்டாலும்கூட, ஏனையவர்கள் அதற்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

பாரம்பரிய தமிழ்த் தேசிய அரசியல் வீழ்ச்சியடைந்துகொண்டு செல்வதாகவே தெரிகின்றது. யுத்தத்துக்குப் பின்னரான சூழலை சரியாகப் புரிந்து கொண்டு, சூழலுக்கேற்ற அணுகுமுறைகளைக் கையாளுவதில், தமிழர் தரப்புக்கள் தோல்வியடைந்திருக்கின்றன. அதேவேளை, புதிய தலைமுறை ஒன்றை ஜனநாயக அரசியலுக்குள் ஈர்ப்பத்திலும் தமிழ்த் தேசிய தரப்புக்கள் தோல்வியடைந்திருக்கின்றன. இந்த நிலையில் ஒரு சிலரின் பெயர்களால் மட்டுமே தமிழ்த் தேசிய அரசியல் அடையாளப்படுத்துப்படுகின்றது.

ஆனால் ஆகக் குறைந்தது, ஆரம்பகால மிதவாத அரசியல் தலைவர்களிடமிருந்த அர்ப்பணிப்பைக்கூட, இப்போது காண முடியவில்லை. அர்ப்பணிப்பு மட்டுமல்ல ஆளுமையையும் காணவில்லை. அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்றவர்கள் ஆளுமை செலுத்திய மிதவாத அரசியல் பாரம்பரியத்தின் தொடர்ச்சியை இன்றைய மிதவாத அரசியலில் காணமுடியவில்லை. பணமிருப்பவர்கள் எல்லோரும் கூட்டமைப்பில் இணையலாம் என்னும் கவலைக்குரிய சூழலே மேலோங்கிக் கிடக்கின்றது. ஆளுமையுள்வர்கள் தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து, ஒதுங்கிச் செல்லுமளவுக்கான மனஉளைச்சலை, ஏற்படுத்தக்கூடிய சூழலே நமக்கு முன்னால் பிரகாசமாக தெரிகின்றது. தமிழ்த் தேசியம் என்பது வெறுமனே - யார் அதிகம் சத்தம் போடுகின்றனர் - யார் அதிகம் சுலோகங்களை உச்சரிக்கின்றனர் - என்னும் குறுகிய வாதத்துக்குள் முடங்கிக் கிடக்கின்றது. முதலில் இந்த குறுகிய வாதங்களிலிருந்து தமிழர் அரசியலை விடுவிக்க வேண்டியிருக்கின்றது. இலாவிட்டால் இறுதியில் சுலோகங்கள் மட்டுமே மிஞ்சும்.

இப்போது தமிழ் அரசியலுக்கு தேவை, சுலோகங்கள் அல்ல மாறாக, சூழ்நிலைகளை துல்லியமாக மதிப்பிட்டு, அதற்கேற்ப தந்திரோபாயமாக நகர்வது பற்றியே தமிழர் தரப்புக்கள் சிந்திக்க வேண்டும். அதற்கு முதலில், ஒரு வலுவான அரசியல் ஸ்தானத்தை பேணிப் பாதுகாக்க வேண்டும். ஓர் ஒப்பீட்டடிப்படையில், கட்டுறுதியான ஒரு தலைமை கட்டாயமானது.

# பணவீக்கம் விளங்கிக் கொள்ளுதல்!



*அண்மைய நாட்களில் இலங்கையில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும் பணவீக் கம் என்ற சொல் முக்கியத்துவம் பெற்றுள் ளது. இந்தப் பணவீக்கம் என்றால் என்ன? அது நமது அன்றாட வாழ்வில் ஏற்படுத்தக் கூடிய தாக்கம் என்ன என்பதை விளக்கமாகப் பார்க்கலாம்...!*

**பணவீக்கம்** (Inflation): விலையின் பொது அளவு தொடர்ந்து ஏறிக்கொண்டிருக் கும் நிலையைப் 'பண வீக்கம்' என்ற சொல் குறிக்கிறது.

**வேறு வேறு:** ஒருசில பொருட்களின் விலை உயர்வு பணவீக்கம் ஆகாது. பெரும்பாலான பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை உயர்வே பணவீக்கம் என்று குறிப்பிடப்படுகிறது.

**விரும்பத்தக்கது:** பொதுவில், பணவீக்கம் என்பது பொருளாதார வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடையதும் விரும்பத்தக்கதும் ஆகும்.

**அளவீடுகள்:** பொதுவாக மொத்த விலைக் குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண் ஆகியவற்றின் அடிப்படையில் பணவீக்கம் கணக்கிடப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவைகளின் சராசரி விலையிலிருந்து இந்தக் குறியீட்டெண்கள் நிர்ணயிக்கப்படுகின்றன.

**சதவீதம்:** எண்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டாலும் பணவீக்கம் சதவீதமாகவே குறிப்பிடப்படுகிறது.

**அடிப்படை ஆண்டு:** முந்தைய ஆண்டை அடிப்படையாகக் கொண்டு பணவீக்கம் அளவிடப்படுகிறது. வாராந்திர அளவிலும் பணவீக்கம் முந்தைய வாரத்துடன் ஒப்பிட்டு நிர்ணயிக்கப்படுகிறது.

**பணவீக்கத்தின் வகைகள்:** சந்தைத் தேவைகளின் காரணமாக உருவாகும் பணவீக்கம், உற்பத்திச் செலவு அதிகரிப்பின் காரணமாக உருவாகும் பணவீக்கம் ஆகிய இரு பெரும் வகைமைகளே நீண்ட காலமாகக் குறிப்பிடப்பட்டுவந்தன.

**நவீன வகைகள்:** ஒற்றை இலக்கத்திலான பணவீக்கம் ஊர்ந்துசெல்லும் பணவீக்கம் என்றும், இரட்டை இலக்கத்திலான பணவீக்கம் பாய்ந்துசெல்லும் பணவீக்கம் என்றும் மிகக் குறுகிய காலகட்டத்தில் ஏற்படும் பணவீக்கம் அதிஉயர் பணவீக்கம் என்றும் தற்போது வகைப்படுத்தப்படுகின்றன. அதிஉயர் பணவீக்கமானது, உள்நாட்டுப் பணமதிப்பின் மீது ஒட்டுமொத்த நம்பிக்கையையும் இழக்கின்ற சூழலைக் குறிக்கிறது. உதாரணம், இலங்கை.

**விலையின் நிலைத்ததன்மை** (Price stability): பணவியலின் (monetary policy) முதன்மை இலக்கே விலை உறுதித்தன்மை தான் என்று வழிகாட்டியவர் பொருளியல் மேதை கீன்ஸ். இந்தக் கோட்பாடு, அமெரிக்காவில் ரூஸ்வெல்ட் ஆட்சிக் காலத்தில் அரசுக் கொள்கையாக ஏற்கப்பட்டது.

**விமர்சனங்கள்:** விலை உறுதிப்பாடு குறித்த விமர்சனங்களும் உண்டு. விலைவாசி உயர்வதற்குப் பணவியல் கொள்கை மட்டுமே காரணமாவதில்லை, நீண்ட காலமாக விலை உயராதிருந்தால் அது முதலீடுகளுக்கு ஊக்கமளிக்காது, அந்நியச் செலாவணி முக்கியப் பங்கு வகிக்கும் நாடுகளுக்கு இது பொருத்தமான கொள்கையாக இருக்க முடியாது என்பது போன்ற விமர்சனங்கள் அவற்றில் முக்கியமானவை.

**பணவியல் கட்டுப்பாட்டுக் கருவிகள்:** பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தக் கடன் கட்டுப்பாடு, பண மதிப்பிழப்பு, புதிய பணத் தாள்களை அச்சிடுதல் ஆகிய பணவியல் கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன. பணவியல் கொள்கை சார்ந்த அதிகாரங்களும் பொறுப்புகளும் மைய வங்கியான இலங்கை மத்திய வங்கியிடம் உள்ளன.

நிதியியல் கட்டுப்பாட்டுக் கருவிகள்: அரசின் கூடுதல் செலவுகளைக் குறைப்பது, நேரடி வரிவிதிப்பை அதிகரிப்பது, மறைமுக வரிவிதிப்புகளைக் குறைப்பது, உபரி பட்ஜெட் முறையைப் பின்பற்றுவது ஆகியவை அரசுத் தரப்பிலான நிதியியல் (fiscal) கட்டுப்பாட்டு முறைகளாகும்.


**கடன் கட்டுப்பாடு:** (Credit control) பணப்புழக்கம் அதிகரித்துப் பணவீக்கம் நிலவுவதாக மைய வங்கி உணர்ந்தால், வங்கி வட்டி வீதத்தை உயர்த்துகிறது. இதனால், கடன் வாங்குபவர்கள் அதிக வட்டி வீதத்தில் கடன் வாங்க முன்வருவதில்லை. விளைவாக, பண்டங்களின் தேவை குறைந்து அவற்றின் விலையும் குறைகிறது.

**வங்கி வட்டி வீதம்:** (Bank Rate) இலங்கை மத்திய வங்கி, எந்த வட்டி வீதத்தில் வணிக வங்கிகளுக்கு அவற்றின் கடன் பத்திரங்களுக்கு எதிராகக் கடன் வழங்குகிறதோ அந்த வட்டி வீதம், வங்கி வட்டி வீதம் எனப்படுகிறது.

**திறந்த சந்தை நடவடிக்கைகள்:** (Open market operations) பணவீக்கத்தின்போது மத்திய வங்கி தன் கையிலுள்ள அரசுக் கடன் பத்திரங்களை விற்கிறது. அதை வாங்கும் வணிக வங்கிகளின் பணக் கையிருப்பு குறைகிறது இதனால், பொதுமக்களுக்கு அளிக்க வாய்ப்புள்ள கடனளவும் குறைகிறது.

**பண வாட்டம்:** (Deflation) பணவீக்கத்துக்கு நேரெதிரான நிலை இது. மிகவும் அரிதாகவே நிகழக்கூடியது. பொருளாதார வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் இது விரும்பத்தக்கது அல்ல. பணப்புழக்கம் குறைந்தால் மத்திய வங்கி, வங்கி வட்டி வீதத்தைக் குறைக்கிறது. கடன் வாங்குபவர்கள் தங்கள் முதலீட்டை அதிகரிக்கின்றனர். விளைவாக, வேலைவாய்ப்பும் மக்களின் வருமானமும் கூடுகிறது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



| | | |
|---|---|---|
| ஜுன் - 09 | | வியாழக்கிழமை |
| சுபகிருது வருடம் - | | வைகாசி 26 |
| நல்ல நேரம் | : | 10.30 - 12.00 |
| ராகு காலம் | : | 1.30 - 03.00 |
| திதி | : | தசமி |




**மேடம்**
பிரச்னைகள் இன்று முடிவிற்கு வரும். செலவு அதிகரித்தாலும் அதற்கேற்ப வருமானம் வரும். சுய ஆற்றல் வெளிப்படும். உங்கள் செயல்களைக் கண்டு எதிரிகள் பின் வாங்குவார்கள்.

**இடபம்**
எதிர்பார்த்த நன்மை தள்ளிப் போகும். பிள்ளைகளின் வழியே செலவு உண்டாகும். சங்கடம் விலகும். உங்களுடைய அறிவாற்றலால் பிரச்னைகளில் இருந்து வெளியில் வருவீர்கள்.

**மிதுனம்**
அரசு வழி முயற்சிகளில் எதிர்பார்க்கும் நன்மையை அடைய முடியாமல் போகும். எதிர்பார்த்தவற்றில் மகிழ்ச்சி உண்டாகும். சுமாரான நாள். அரசு விஷயத்தில் கவனம் தேவை.

**கடகம்**
தடைகளை சரி செய்வீர்கள். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். நீண்ட நாள் பிரச்னைகள் இன்று முடிவுக்கு வரும். தனித்திறமை வெளிப்படுத்தி புகழடைவீர்கள்.

**சிம்மம்**
சிந்தித்து செயல்படுவது நல்லது. பொருள்களை கையாள்வதில் எச்சரிக்கை கவனம் தேவை. குடும்ப நிலை உயரும். புதிய சொத்து, நவீன சாதனம் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி**
இழுபறியாக இருந்த வேலை இன்று முடியும். மனம் மகிழும்படியான சூழல் உருவாகும். வீட்டில் திருமணப் பேச்சு எழும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு வரன்கள் தேடி வரும்.

**துலாம்**
எதிர்பாராத வகையில் திடீர் செலவு தோன்றும். மனதில் வீண் குழப்பம் வந்து செல்லும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. மனம் விரும்பாத சம்பவம் ஒன்று இன்று நடைபெறும்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். செயல்களில் இன்று வெற்றி சந்திப்பீர்கள். யோகமான நாள். உங்கள் மனம் உற்சாகமடையும். முயற்சியில் இன்று சாதகமான நிலை உருவாகும். எதிர்காலம் குறித்து சிந்திப்பீர்கள்.

**தனுசு**
வேலை தேடியவர்களுக்கு நல்ல தகவல் வரும். புதிய தொழில் முயற்சி வெற்றி பெறும். உங்களுடைய ஆற்றல் வெளிப்படும். முயற்சியில் தடை விலகி நினைத்ததை அடைவீர்கள்.

**மகரம்**
எதிர்பார்த்த விஷயத்தில் தாமதம் ஏற்படும். உங்களை சிலர் விமர்சனம் செய்வார்கள். பிரச்னைகள் விலகும். செயல்களில் வேகம் உண்டாகும் என்றாலும் முடிவு தாமதமாகும்.

**கும்பம்**
மனநிலை பாதிக்கும் வகையில் சிலர் செயல்படலாம். கவனமுடன் செயல்படுவது நல்லது. தேவையற்ற சங்கடங்களால் சோர்வு ஏற்படும். பயணத்தில் எச்சரிக்கையும் கவனமும் தேவை.

**மீனம்**
உற்சாகமுடன் செயல்படுவீர்கள்.குழப்பம் விலகி தெளிவடைவீர்கள். ஆதாயம் உண்டாகும். புதிய சிந்தனை மேலோங்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். . கணவன் மனைவிக்குள் இருந்த பிரச்னைகள் விலகும்.

# தமிழகத்தில் ரூ. 12000 கோடி பயிர் கடன் வழங்க இலக்கு!

தஞ்சாவூர், ஜுன் 09

தமிழகம் முழுவதும் இந்த ஆண்டில் 12,000 கோடி இந்திய ரூபாய் பயிர் கடன்வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தகுதியான விவசாயிகளுக்கு வீடு தேடிச் சென்று கடன் வழங்கப்படும் என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி தெரிவித்துள்ளார்.

விவசாய ஆராய்ச்சிக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தமிழகம் முழுவதும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் இந்த ஆண்டு ரூ. 12,000 கோடிக்கு மேல் பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு கூட்டுறவு சங்கங்களில் அதிக அளவில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, கடன் தொகையும் அதிக அளவில் வழங்கப்பட்டுள்ளது. உரிய காலத்தில் கடன்தொகையை கட்டினால் வட்டிஇல்லை என்பதால் கடன் தொகையும் திருப்பிச் செலுத்தப்பட்டு வருகிறது.

இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் போன்று, கூட்டுறவுத் துறை சார்பில் தகுதியான விவசாயிகளின் வீடுகளுக்கே சென்று கடன் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக இத்திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும்.

15 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே இடத்தில் பணியாற்றும் கூட்டுறவு சங்க செயலாளர்களால் பல்வேறு புகார்கள் வருவதால், அவர்களை இடம் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

(ஐ)

# தமிழக மக்கள் என்மீது வைத்த நம்பிக்கையை காப்பாற்றுவேன்

## தமிழக முதலமைச்சர் ஸ்டாலின்



சிவகங்கை, ஜுன் 09

தமிழக மக்கள் என் மீதும், ஆட்சி மீதும் வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்ற தொடர்ந்து பாடுபடுவேன் என தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

சிவகங்கையில் விழா ஒன்றில் பங்கேற்ற அவர் பேசுகையில்,

இந்திய விடுதலையில் சிவகங்கை மண் முக்கியப் பங்கு வகித்துள்ளது. திராவிட இயக்கத்தின் முக்கிய நோக்கமே சமத்துவம், கல்வி ஆகியவை தான். அதனால்தான் கருணாநிதி அனைத்து வசதிகளுடன் கூடிய சமத்துவபுரம் திட்டத்தை தொடங்கினார்.

அரசின் திட்டங்கள் கடைக்கோடி மக்களுக்கு சென்று சேர்ப்பதுதான் திராவிட மொடல் ஆட்சி. அந்த பணியை கடந்த ஓராண்டாக மக்களை நேரடியாகச் சென்று வழங்கி வருகின்றோம்.

கருணாநிதியின் இடத்தை யாரலும் நிரப்பிவிட முடியாது. ஆனால், அவரைப் போல செயல்பட முடியும். தற்போதைய ஆட்சி மீது மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். தமிழக மக்கள் என் மீதும், ஆட்சி மீதும் வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்ற தொடர்ந்து பாடுபடுவேன் - என்றார்.

(ஐ)

# கல்விக் கொள்கை மூலம் ஹிந்தி திணிக்கப்படாது!

## தமிழக பா. ஜ. க. அறிவிப்பு

திருச்சி, ஜுன் 08

பா.ஜ.க. புதிய கல்வி கொள்கை மூலம் ஹிந்தியை திணிக்காது என்று அந்தக் கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை கூறினார்.

திருச்சியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜி.எஸ்.டி.யில் எவ்வளவு நிதி தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கே தெரியவில்லை. பிரதமர் மோடி சென்னைக்கு வந்தபோது, எங்களுக்கு வழங்கவேண்டிய ஜி.எஸ்.டி. நிலுவை தொகையை தாருங்கள் என்று கேட்டார். அதற்கு பிரதமர் ஜி.எஸ்.டி. நிலுவை தொகை ரூ.9 ஆயிரத்து 602 கோடியை நாங்கள் கொடுத்து விட்டோம் என்று மேடையில் கூறிவிட்டார்.

பா.ஜ.க ஆட்சிக்கு வந்த பின்தான் மருத்துவத்துக்ஷகான ஆசனங்கள் 66 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. ஏழை - எளிய மாணவர்கள் மருத்துவர்களாக உருவாக வேண்டும் என்பதே நமது இலக்கு. பா.ஜ.க. புதிய கல்வி கொள்கை மூலம் ஹிந்தியை கண்டிப்பாக திணிக்காது.

அமைச்சர் பொன்முடி விருப்பம் உள்ளவர்கள் ஹிந்தியை தேர்வு செய்து படிக்கலாம் என்று கூறி வருகிறார். புதிய கல்விக் கொள்கையில் என்ன உள்ளதோ அதை அப்படியே கையில் எடுத்துக் கொண்டுதான் தமிழகத்தின் கல்வி கொள்கை என்று கூறி வருகின்றனர். இங்கு உள்ள அமைச்சர்கள் அனைவருமே தமிழகத்தை தாண்டி எங்குமே செல்ல மாட்டார்கள் - என்றார்.

(ஐ)

# அ.தி. மு. க. பொதுக்குழு கூட்டம் தடை விதிக்கக் கோரி வழக்கு

சென்னை, ஜுன் 09

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள அ. தி. மு. க. பொதுக்குழுக் கூட்டத்துக்கு தடை விதிக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கில் கட்சியின் அவைத்தலைவர், ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் உள்ளிட்ட நிர்வாகிகள் பதிலளிக்க சென்னை பெருநகர உரிமையியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அ. தி. மு. க. பொதுக்குழுக்கூட்டம் வரும் 23ஆம் திகதி நடத்தப்படும் என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

இந்நிலையில் இந்த பொதுக்குழுக் கூட்டத்துக்கு தடை கோரி திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த அ. தி. மு. க. உறுப்பினரான எஸ்.சூர்யமூர்த்தி என்பவர் சென்னை பெருநகர உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அதில், அ. தி. மு. க. பொதுச்செயலாளராக பதவி வகித்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவுக்குப்பிறகு கடந்த 2017ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுக்குழுவில் கட்சியின் விதிகளுக்கு முரணாக அ. தி. மு. க. ஒருங்கிணைப்பாளராக ஓ.பன்னீர்செல்வமும், இணை ஒருங்கிணைப்பாளராக கே.பழனிசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதுநாள் வரை அ. தி. மு. க. ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் பதவியை எந்த உரிமையியல் நீதிமன்றமும் அங்கீகரிக்கவில்லை. அதேபோல அ. தி. மு. கவின் உச்சபட்ச பதவியான பொதுச் செயலாளர் பதவியை நீக்கியது சரிதான் என்றும் எந்த நீதிமன்றமும் தெரிவிக்கவில்லை. எனவே கட்சி விதிகளுக்குப் புறம்பாக வரும் 23 ஆம் திகதி சென்னை வானகரத்தில் நடைபெறும் அ. தி. மு. க. பொதுக்குழுக் கூட்டத்துக்கு தடை விதிக்க வேண்டும், என அதில் கோரியிருந்தார்.

இந்த வழக்கை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

(ஐ)

# சர்வகட்சி அரசுக்கு சு.க. பூரண ஆதரவு

## மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு



**கொழும்பு, ஜூன் 09**

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது நாட்டில் சர்வகட்சி அரசை உருவாக்குவதற்காக முழுமையான நிபந்தனையற்ற ஆதரவை வழங்குகின்றது என அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாடுகளினதும், நாணய அமைப்புகளினதும் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் சர்வதேச நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பேச்சுகளை மேற்கொண்டபோது, நாட்டில் சர்வகட்சியொன்றை உருவாக்கினால் மாத்திரமே தாங்கள் உதவிகளை வழங்குவதாக சர்வதேச நாடுகள் தெரிவித்தன.

எனவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது நாட்டில் சர்வகட்சி அரசொன்றை உருவாக்குவதற்காக முழுமையான நிபந்தனையற்ற ஆதரவை வழங்குகின்றது" - என்றார்.

43 ஆம் படையணி எனும் அரசியல் இயக்கத்தின் பிரதானியாக சம்பிக்க ரணவக்க செயற்பட்டுவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# மன்னாரில் வீட்டுத்தோட்டத்துக்காக அலுவலர்களுக்கு விதை நாற்றுக்கள்

மன்னார், ஜூன் 09

மன்னார் மாவட்ட செயலக அலுவலர்கள் நலன்புரி சங்கத்தால் நடத்தப்படும் வீட்டுத் தோட்டச் செய்கை போட்டியில் கலந்துகொள்ள தங்கள் பெயர் விவரத்தை வழங்கிய அலுவலர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கும் விதை நாற்றுக்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று புதன்கிழமை காலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது மாவட்ட செயலக அலுவலர்கள் நலன்புரிச் சங்கத்தால் நடத்தப்படும் வீட்டுத் தோட்டச் செய்கைப் போட்டியில் கலந்துகொள்ள பெயர் வழங்கிய அலுவலர்களுக்கு விதை நாற்றுக்கள் வழங்கப்பட்டன. (அ)

# மாகாணப் பாடசாலைகளில் 8,000 ஆசிரியர் வெற்றிடங்கள்

கொழும்பு, ஜூன் 09

நாடளாவிய ரீதியில் மாகாணப் பாடசாலைகளில் 8,000 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்நிலையில், 22,000 ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். மாத்தளை மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் ரோஹினி விஜேரத்ன எழுப்பிய கேள் விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (அ)

# தனி வழியில் சம்பிக்க!



கொழும்பு, ஜூன் 09

பாராளுமன்றத்தில் தான் சுயாதீனமாக செயற்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்தே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

மனச்சாட்சியின் பிரகாரமே இந்த முடிவை எடுத்ததாகவும் அவர் அறிவித்தார்.

அதேவேளை, தற்போதைய அரசில் அமைச்சு பதவியை ஏற்கபோவதில்லை எனவும் சம்பிக்க ரணவக்க திட்டவட்டமாக அறிவித்தார். (அ)

# தேன் குளவி தாக்கி முதியவர் மரணம்!

மட்டக்களப்பு, ஜூன் 09

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓட்டமாவடி பகுதியில் தேன் குளவி தாக்கிய நிலையில் முதியவர் ஒருவர் நேற்று புதன்கிழமை பகல் மரணித்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை உமர் வைத்தியர் வீதியைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான மீராலெப்பை அபூசாலி (வயது-74) என்பவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

ஓட்டமாவடி சந்தை வழியாக தனது வீட்டுக்கு வரும் வழியில் தேன் கூடு கலைந்திருந்த நிலையில் தேன் குளவிகள் குறித்த நபரை தாக்கியுள்ளன. அவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் இருதய நோயாளி என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸை மறுசீரமைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 09

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் மறுசீரமைப்புப் பணிகள் இந்த வருடத்துக்குள் பூர்த்தி செய்யப்படவேண்டும் என துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தற்போது 315 பில்லியன் ரூபா கடனாக இருப்பதே இதற்கு முக்கிய காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கட்டுநாயக்கவில் இடம்பெற்ற ஸ்ரீலங்கன் விமான சேவையின் இலவச ஊழியர் சங்கத்துடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த மறுசீரமைப்பின் மூலம் ஊழியர்களின் விருப்பத்திற்கேற்ப ஓய்வு பெறுவதற்கான முன்மொழிவை முன்வைக்குமாறு அமைச்சர் விமான நிறுவன நிர்வாகத்துக்கு அறிவுறுத்தினார். (அ)

# மின் கட்டணத்தை உயர்த்த இது தகுந்த நேரம் இல்லை!

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 09

மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்காக இலங்கை மின்சார சபை விடுத்துள்ள கோரிக்கையை அமைச்சரவையில் முன்வைக்கப்போவதில்லை என அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் இதனைப் பதிவிட்டுள்ள அவர், மீள் பிறப்பிக்கத்தக்க சக்தி வலு உற்பத்தித் திட்டங்களுக்கு உதவியளிக்காமையால் கட்டண அதிகரிப்பு தொடர்பான கோரிக்கையை அமைச்சரவையில் முன்வைக்கப் போவதில்லை என குறிப்பிட்டுள்ளார்.

மீள் பிறப்பிக்கத்தக்க திட்டங்களுக்கு இலங்கை மின்சார சபை அனுமதி வழங்கவேண்டும். அத்துடன் அதன் பணியாளர்களுக்கான வேதனத்தைச் செலுத்துவதற்காக மின் கட்டணத்தை அதிகரிப்பதை விடவும் உற்பத்தி செலவுகளை குறைக்கவேண்டும் எனவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மின்கட்டணத்தை அதிகரிப் பதற்கான நேரம் இதுவல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் பணியாளர்களின் வேதனத்தை 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை 25 சதவீதத்தால் அதிகரிப்பதற்கான கூட்டு ஒப்பந்தம் ஒன்று உள்ளது.

மீள் பிறப்பிக்கத்தக்க திட்டங்கள் அல்லது உற்பத்திச் செலவை குறைப்பதற்கான திட்டங்கள் எவையும் இல்லை. இதன் காரணமாக வேதனம் மற்றும் உற்பத்திச் செலவுகள் என்பன நுகர்வோர் மீது சுமத்தப்படுகின்றன. இது மாற்றப்படவேண்டும் எனவும் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இது உரிய நேரிமில்லை எனவும் மின் சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (அ)

# கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரை இரவு நேர கடுகதி ரயிலை இயக்க திட்டம்!

கொழும்பு, ஜூன்.09

ரயில் கட்டணத்தை பஸ் கட்டணத்தில் பாதியாகக் கொண்ட பொதுக் கொள்கையொன்றை வகுக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அதேவேளை, கொழும்பு கோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் வரை இரவு நேர கடுகதி ரயிலை இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

எனினும், எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் ஒரு ரயில் பயணத்துக்கு மாத்திரம் 300,000 ரூபாய் வரை நட்டம் ஏற்படுவதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன சுட்டிக்காட்டினார். (அ)

# ஜனாதிபதி கோட்டாபய ஒரே இரவில் எடுத்த முடிவால் முழு நாடுமே சீரழிவு

## சஜித் பிரேமதாஸ சபையில் சுட்டிக்காட்டு




**கொழும்பு, ஜூன் 09**

**"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரே இரவில் எடுத்த முட்டாள்தனமான முடிவால் முழு நாடுமே சீரழிந்துள்ளது. உரத்தடை என்ற அவரது முடிவால் இன்று நாடு உணவு நெருக்கடியையும் பெரும் பஞ்சத்தையும் சந்தித்து வருகின்றது."**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் குற்றஞ்சாட்டினார்.**

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கட்டளை நியதிகள் சட்டம் 27/2 இன் ஊடாக நாட்டின் தற்போதைய நெருக்கடி தொடர்பாக அரசிடம் பல கேள்விகளை முன்வைத்து இந்த முட்டாள்தனமான முடிவுகளால் நாட்டைச் சீரழித்தது ஏன் என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை அரிசியில் தன்னிறைவு பெற்ற நம் நாடு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசு இரசாயன உரங்களை ஒரே இரவில் தடை செய்ய மேற்கொள்ளப்பட்ட முட்டாள்தனமான ஒரு முடிவால் முற்றாகச் சரிந்தது.

இந்த முடிவானது இன்று அரிசி விலை கடுமையாக உயர்வதற்கு வழிவகுத்தது மட்டுமல்லாமல், உணவு நெருக்கடிக்கும் வழிவகுத்துள்ளது.

இது மாத்திரமன்றி எதிர்காலத்தில் மக்கள் தொகையில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் ஊட்டச் சத்து குறைபாட்டால் பாதிக்கப்படலாம்.

ஒவ்வொருவரும் இரண்டு வேளை உணவுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த வேண்டியிருக்கும் எனத் தற்போதைய பிரதமரும் கூட கூறுகிறார்.

வேகமாக உயர்ந்து வரும் பொருட்களின் விலைகள் காரணமாக மனித நுகர்வுணவு வேளையில் புரதத்தின் அளவு படிப்படியாகக் குறைந்து வருகின்றது.

இதற்குப் பொறுப்பானவர்களும், பொறுப்புக்கூற வேண்டியவர்களும் தங்களின் தவறுக்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்டாலும் கூட தவறைத் திருத்துவதற்கு இது மாத்திரம் பரிகாரமாக அமையாது.

தமது வாழ்வாதாரமாக விவசாயம் மேற்கொண்டு வந்த மக்களுக்கு விவசாயம் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தி, பிற தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களைத் தங்களின் தேவைக்காக விவசாயம் செய்யச் சொல்லிக் கோருவதுதான் இப்போது அரசின் ஒரே தீர்வாகத் தெரிகின்றது.

எவ்வாறாயினும், எதிர்வரும் காலங்களில் மக்களின் பட்டினியைப் போக்க உணவு விநியோக வலயமைப்பை வலுப்படுத்தத் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்- என்றார். (அ)



# பொகவந்தலாவயில் மண்சரிவு அபாயம்!

## 22 பேர் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 09

பொகவந்தலாவை - கெம்பியன் கீழ் பிரிவு தோட்டத்தில் 03ஆம் இலக்க லயன் குடியிருப்புக்கு அருகாமையில் மண்சரிவு அபாயம் காரணமாக, நான்கு குடும்பங்களை சேர்ந்த 22 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என, பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

11 வீடுகளைக் கொண்ட லயக் குடியிருப்பு ஒன்றே மண் சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும், இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தோட்ட உத்தியோகத்தர்களின் விடுதிகளில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுள் 11 சிறுவர்கள், 06ஆண்கள், 05 பெண்களும் உள்ளடங்குவதாகவும், அனர்த்தம் தொடர்பில் கிராம உத்தியோகத்தர் ஊடாக அம்பகமுவ பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த தோட்டத்தில் இதற்கு முன்பும் மண் சரிவு அபாயம் ஏற்பட்ட போது, மலையக அரசியல்வாதிகள் பார்வையிட்டு மாத்திரமே சென்றதாகவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் . (அ)

# விளக்கு தவறி வீழ்ந்து தீ பற்றி எரிந்தது வீடு!

கொழும்பு, ஜூன் 09

கண்டி-ரங்கல-லோலுகாமம் தோட்டத்திலுள்ள வீடொன்றில் தீ பரவியுள்ளது.

நேற்று முன் தினம் மாலை மின்சாரம் துண்டிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த விளக்கு கீழே வீழ்ந்து தீப்பற்றியுள்ளது.

சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்ற போதிலும், வீட்டிலிருந்த பொருட்கள் தீயினால் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் ரங் கல பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (அ)

# அரச நிறுவனங்களில் இனிமேல் புதிய திட்டம்

கொழும்பு, ஜூன் 09

அரச நிறுவனங்களின் வருடாந்த மற்றும் அரையாண்டு அறிக்கைகளை பாராளுமன்றம், கணக்காய்வாளர் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு ஈ-புக் வடிவில் அனுப்பும் திட்டமொன்று அறிமுகப்படுத்தவுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயாதுன்னே தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களில் காகிதங்களுக்காக செலவிடப்படும் பணத்தை சேமிப்பதற்காகவே புதிய விசேட திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச நிறுவனங்களின் வருடாந்த மற்றும் அரையாண்டு அறிக்கைகளை பாராளுமன்றம், கணக்காய்வாளர் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு ஈ.-புக் (E-Book) வடிவில் அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், பல்வேறு படிவங்களை நிரப்புவதற்கு பதிலாக ஒரு படிவம் வழங்கப்பட்டு வட்ஸ் அப் போன்ற சமூக ஊடக வழிமுறைகளை பயன்படுத்தி உரிய தரப்பினருக்கு படிவங்களை அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டத்தின் கீழ், அச்சிடப்பட்ட துண்டுப்பிரசுரங்களை சமூக ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் திரைகளில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த திட்டத்திற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். (அ)

# கத்திக் குத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, ஜூன் 09

வாக்குவாதத்தில் நபர் ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

ராகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெந்தலியத்தபாலுவ பிரதேசத்தில் நேற்று முன் தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் கனேமுல்ல, கெந்தலியத்தபாலுவ பகுதியைச் சேர்ந்த 55 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொலையைச் செய்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரும் காயமடைந்திருந்ததால் ராகம வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பொலிஸ் பாதுகாப்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ)

# ரவிந்துவும், மனைவியும் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 09

கைது செய்யப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதஆராச்சியின் மகன் மற்றும் மருமகள் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று வலஸ்முல்லை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் இந்த பிணை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி தெற்கு அதிவேக வீதியின் பெந்திகம சந்திப்பில் பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் குற்றவியல் வன்முறையில் ஈடுபட்டதாக ரவிந்து வெதஆராச்சி மற்றும் அவரது மனைவி நெத்மி ஹரிந்தி டி சில்வா ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான காணொளி ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு 2021 இல் 1.5 பில்லியன் ரூபா இலாபம்!

கொழும்பு, ஜூன் 09

கடந்த வருடம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 1.5 பில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது.

அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் வசமுள்ள மரத் தளபாடங்களை வெளிநாடுகளில் விற்பனை செய்வதன் மூலம் அந்நிய செலாவணியை ஈட்டுவது குறித்தும் இந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

# இலங்கையின் கடன் சுமையை சமாளிக்க உதவுவதற்கு தயார்!

*சீன வெளியுறவு அமைச்சு அறிவிப்பு*

**பீஜிங், ஜுன் 09**

**இலங்கையின் கடன் சுமையை சமாளிக்க மற்ற நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து உதவுவதில் சீனா தீவிரமான பங்கை வகிக்க தயாராக உள்ளது என்று வெளிவிவகார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் தெரிவித்தார்.**

வழக்கமான செய்தியாளர் கூட்டத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வெளிநாட்டு முதலீட்டு பங்காளிகளின் நியாயமான உரிமைகளை பாதுகாக்கவும் மற்றும் அதன் உள்நாட்டு சந்தையின் நிலையான செயற்பாட்டை உறுதிப்படுத்தவும் இலங்கைக்கு சீனா அழைப்பு விடுக்கிறது எனவும் அவர் கூறினார்.

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமீபத்தில் ஒரு நேர்காணலில், 'தென் கிழக்கு ஆசியா மற்றும் ஆபிரிக்காவை நோக்கி சீனா தனது



மூலோபாய கவனத்தை மாற்றுவதாகத் தெரிகிறது. நிதி சிக்கலில் உள்ள தெற்காசிய நாடுகள் பீஜிங்கில் இருந்து அதே கவனத்தைப் பெற வில்லை' என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதியின் கருத்துக்களுக்குப் பதிலளித்த ஜாவோ, ஒரு நல்ல அண்டை நாடு என்ற வகையில், சீனா இலங்கை மக்களுக்கு 500 மில்லியன் யுவான் (சுமார் 74.9 மில்லியன் டாலர்) மனிதாபிமான உதவி உட்பட பல நிவாரணங்களை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

தெற்காசிய நாடுகளுடனும் நல்ல அண்டை நாடுகளுடனும் நல்லுறவை வளர்ப்பதற்கு சீனா அதிக முக்கியத்துவம் அளிக்கிறது என்றும் அவர் கூறினார்.

பிராந்திய அமைதி மற்றும் வளர்ச்சியின் நேர்மறையான போக்கைப் பேணவும் மக்களுக்கு அதிக நன்மைகளை கொண்டு வரவும் சீனா தயாராக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)



## லொறியில் ரூ. 11 லட்சம் பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்கள் திருட்டு!

யாழ்ப்பாணம், ஜுன் 09

கோண்டாவிலில் களஞ்சிய வளாகத்தில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த பாரவூர்தியை உடைத்து சுமார் 11 லட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களைத் திருடிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றொருவர் தலைமறைவாகிய நிலையில் தேடப்பட்டு வருகிறார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருடிய இலத்திரனியல் பொருட்களை நேற்று விற்பனை செய்தபோது சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டார்.

திருநெல்வேலியில் அமைந்துள்ள இலத்திரனியல் பொருட்கள் விற்பனை நிலையத்தின் களஞ்சியம் கோண்டாவிலில் உள்ளது.

கடந்த மாதம் வர்த்தக நிலையத்துக்கு எடுத்து வருவதற்காக பாரவூர்தியில் பொருள்கள் ஏற்றப்பட்ட நிலையில் டீசல் இல்லாமை காரணமாக தரித்துவிடப்பட்டிருந்தது. அதன்போதே இரவு வேளை பாரவூர்தி உடைக்கப் பட்டு சுமார் 11 லட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன.

சம்பவம் தொடர்பில் வர்த்தகரினால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதுதொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் கோப்பாய் பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றைய தினம் ஒருவர் கைது செய்யப்பட்டார். கோண்டாவிலைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய இருவரே இந்த திருட்டை மேற்கொண்டுள்ளனர். அவர் களில் ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக 4 வழக்குகளில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜோன்ஸ்டனுக்கு பிடியாணை

கொழும்பு, ஜுன் 09

போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்ய கோட்டை நீதவான் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த மாதம் காலி முகத்திடல் மற்றும் அலரிமாளிகைக்கு முன்பாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது மஹிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் தாக்குதலை நடத்தினர்.

இந்த சம்பவம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சந்தேக நபராக பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பெயரிடப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து சி.ஐ.டியினர் கடந்த ஒரு வாரமாக அவரை வலைவீசி தேடி வருகின்ற போதும் அவர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இந்நிலையில் தன்னை கைது செய்வதை தடுக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ரிட் மனுவை தாக்கல் செய்தார். (அ)

## சகல நிர்மாண பணிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன

கொழும்பு, ஜுன் 09

சிமெந்து விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்து நிர்மாணப் பணிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை தேசிய கட்டடத் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் சுசந்த லியனாராச்சி தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், வற் வரி அதிகரிப்பினால் சிமெந்து மூடை ஒன்றின் விலையை அதிகரித்துள்ளதாக சிமெந்து நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் தற்போது கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டு வரும் பலர் வேலையிழந்துள்ளதால், அவர்கள் பயிர்ச்செய்கையின் பக்கம் திரும்பத் திட்டமிட்டுள்ளனர்.

நிர்மாணத்துறை தற்போது மந்தநிலையில் உள்ளது. கட்டுமானம் தொடர்பான பொருட்களின் விலைகள் பாரியளவில் உயர்ந்துள்ளன-என்றார். (அ)

## தனியார் போக்குவரத்து சேவைகளை முன்னெடுப்பதில் கடும் சிக்கல் நிலை

கொழும்பு, ஜுன் 09

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தனியார் பொதுப் போக்குவரத்து சேவைகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக தனியார் பஸ்கள், ஓட்டோக்கள் மற்றும் வாடகை வாகனங்கள் என்பன உரிய முறையில் போக்குவரத்தில் ஈடுபடவில்லை.

எவ்வாறாயினும், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் மற்றும் ரயில்கள் வழமையான நேர அட்டவணையின் பிரகாரம் சேவையில் ஈடுபடுகின்றன.

நேற்று முன் தினம் இரவு வரை பல தனியார் பஸ்கள், எரிபொருள் வரிசைகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (அ)

## கடவுச்சீட்டு அலுவலகத்தை 24 மணி நேரம் திறவுங்கள்!

கொழும்பு, ஜுன் 09

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் (கடவுச்சீட்டு அலுவலகம்) தற்போது மிகவும் பரபரப்பான இடமாக இருப்பதால் அதனை 24 மணி நேரமும் திறக்க வேண்டும் என முன்னாள் ஆளுநர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார். இதற்குத் தேவையான மனித வளங்கள் தயார்படுத்தப்பட வேண்டுமெனவும், திணைக் களத்தின் கணினி அமைப்பு மந்தகதியில் இருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டி னார். (அ)

## நாணய நிதிய பணிப்பாளருடன் ரணில் விசேட கலந்துரையாடல்

கொழும்பு, ஜுன் 09

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் மாலை கலந்துரையாடினார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பிரதமர் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதன்போது, சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்கள் மட்டத்திலான குழு விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்வதன் மூலம் பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை இறுதி செய்ய முடியும் என பிரதமர் கேட்டுக் கொண்டார்.

பிரிட்ஜிங் நிதி தொடர்பான பேச்சுவார்த்தைகள் இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஊழியர்கள் அளவிலான ஒப்பந்தத்தை முடிப்பதை நம்பியிருப்பதாக பிரதமர் விளக்கினார்.

இந்த இக்கட்டான காலங்களில் இலங்கைக்கு ஆதரவளிக்க தனது விருப்பத்தை முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்தார். (அ)

## ஜோன்ஸ்டன் கைதாவதை தடுக்க கோரி மனு தாக்கல்

கொழும்பு, ஜுன் 09

மே 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கைது செய்யப்படுவதை தடுக்கக் கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிப்பேராணை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் அலரி மாளிகைக்கு முன்பாக அரசுக்கு எதிரான போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் மஹிந்த கஹந்தகம உள்ளிட்ட நால்வரை சட்டமா அதிபர் திணைக்களம் கடந்த முதலாம் திகதி சந்தேக நபர்களாக பெயரிட்டுள்ளது. (அ)

# 2024 தேர்தல் களத்தில் இந்தி வெறியைத் திணிக்க பா.ஜ.க. திட்டம்?

**- விடுதலை இராசேந்திரன்**



பிள்ளையை கிள்ளி விட்டு, தொட்டிலை ஆட்டி விடுவது' என்ற பழமொழி ஒன்றிய பாரதீய ஜனதா அரசுக்கு கனகச்சிதமாக பொருந்தக் கூடியது. ஒருபுறம், தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளின் சிறப்புகளை பெருமையாக பேசுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார் பிரதமர் மோடி. ஆனால் மறுபுறம், இந்தியை தேசிய மொழியாக்க அமித்ஷா போன்ற பா.ஜ.க. தலைவர்கள், வரிந்து கட்டி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அமித்ஷா, 'இந்தியாவில் அனைத்து பகுதியிலும் உள்ள மக்களின் தகவல் தொடர்பு மொழியாக இந்தி இருக்க வேண்டும். ஆங்கிலமாக இருக்கக் கூடாது. நாங்கள் மாநில மொழிகளுக்கு எதிரானவர்கள் அல்ல. ஆங்கிலத்திற்கு மாற்றாக இந்தியை கொண்டு வர வேண்டும் என நினைக்கிறோம்,' என இந்தி திணிப்புக்கு புது விளக்கத்தை தந்தார். இதற்கான காய் நகர்த்தல் டெல்லியில் இருந்து தொடங்கப்பட்டிருக்கிறது. ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள புதுடெல்லி நகராட்சி கவுன்சிலில் தனது அனைத்து துறைகளுக்கும் அறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளது. அதில், 'அலுவல் மொழி அனைத்துமே இந்தியில் மட்டுமே இருக்க வேண்டும், அறிவிப்புகள் அனைத்தும் இந்தியில் மட்டுமே வெளியிடப்பட வேண்டும், பெயர் பலகைகள் அனைத்தும் இந்தி மொழியில் இருக்க வேண்டும்' என உத்தரவிடப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் இதுபோன்ற உத்தரவுகள் நாடு முழுவதும் பரவலாக்கப்பட வாய்ப்புகள் உள்ளன. ஆனால், ஆங்கிலத்தை ஒதுக்கி விட்டு இந்தியை கொண்டு வர முடியுமா? இந்தி திணிக்கப்பட்டால், இந்தி பேசாத தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் எத்தகைய கொந்தளிப்புகள் ஏற்படும் என்பதை அறியாத வர்கள் அல்ல பா.ஜ.க. மேலிட தலைவர்கள். ஆங்கிலத் தின் பரவல் அந்த மொழியை ஜனநாயகப்படுத்தி உள்ளது.

ஒருகாலத்தில் மேல்தட்டு மக்கள் மட்டுமே பேசக் கூடிய மொழியாகவும், நடுத்தர, கீழ்த்தட்டு மக்கள் அஞ்சி ஒதுங்கக் கூடிய மொழியாகவும் இருந்த ஆங்கிலம், இன்று அனைவரின் நாக்கிலும் தாண்டவமாடுகிறது. இதற்கு முக்கிய காரணம், கற்றல், வேலை வாய்ப்பு, புதிய விஷயங்களை அறியவும், வேலை வாய்ப்புக்கும் ஆங்கிலம் இன்றியமையாததாக உள்ளது. கால்சென்டர்கள் முதல் கார்ப்பரேட் வேலைகள் வரை அனைத்திற்கும் ஆங்கிலம் அவசியம் தேவை. நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப நம்மை செதுக்கிக் கொள்ளவும் ஆங்கிலம் தேவைப்படுகிறது.

ஆங்கிலம் ஒருகாலத்தில் மேல்தட்டு மக்கள், சக்தி வாய்ந்தவர்கள், பணக்காரர்களின் மொழியாக இருந்திருக்கலாம். ஆனால், இப்போது அது அனைவருக்கும் அதிகாரமளிக்கும் மொழியாக மாறி உள்ளது. ஆங்கில வழிப் பள்ளிகள் நாடு முழுவதும் பெருகி உள்ளன. பலவற்றிற்கான தேவை இருப்பதால் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் ஆங்கில மொழியை கற்க வேண்டுமென விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட ஆங்கிலத்திற்கு பதிலாக இந்தியை திணிக்கும் அமித் ஷா போன்ற தலைவர்களின் பேச்சு, எவ்வளவு பிற்போக்குத்தனமானது என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை.

அதே சமயம், இந்தி திணிப்பை பா.ஜ.க. மேற்கொள்வது இது ஒன்றும் புதிதல்ல. கடந்த 2019ம் ஆண்டு மக்களவை தேர்தல் வரும் முன்பாக, 2017ல் இதே போல் இந்தி திணிப்பு முயற்சியை மேற்கொண்டனர். ஆனால், பல மொழி ஆர்வலர்கள், மாநில அரசுகளின் எதிர்ப்பால் பின்வாங்கியது. இப்போது மீண்டும் 2024 மக்களவை தேர்தல் நடக்க உள்ள நிலையில், பா.ஜ.க.வின் தேர்தல் ஆயுதமாக இந்தி இருக்கலாம் என அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால், இம்முறை பா.ஜ.க.வும் அதன் இணை அமைப்புகளும் இந்தி விஷயத்தில் மிகத் தீவிரமாக உள்ளன. இதன் விளைவுதான் சமீபத்தில் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் அலுவல் மொழியாக இந்தி இருக்கும் என அறிவிப்பு வெளியானது. ஆங்கிலத்திற்கு பதிலாக அனைத்து அலுவல் செயல்பாடுகளும் இந்தி மொழியிலேயே மேற்கொள்ளப்படும் என்ற ஒன்றிய அரசு, தமிழகத்திலும், புதுச்சேரியிலும் கடும் கண்டனத்தை பெற்றன. இதே போல், உபி அமைச்சர் சஞ்சய் நிஷாத், 'இந்தி பேசத் தெரியாதவர்கள் இந்தியர்களே அல்ல, வெளிநாட்டினர்' என்றார்.

அமித்ஷா கட்டுப்பாட்டில் உள்ள ஒன்றிய உள்துறை அமைச்சகம், நாடு முழுவதும் உள்ள தனது அலுவலகத்தில் 80 சதவீதம் பேர் இந்தி அலுவல் மொழியில் பணியாற்றும் திறனை பெற்றிருப்பதாக அறிக்கை வெளியிட்டுள்ளது. எப்போதுமே சர்ச்சையை கிளப்பி விட்டு அவை எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பார்த்து, எதிர்ப்பு அதிகமாக இருந்தால் அவற்றை கைவிடுவதுதான் பா.ஜ.க.வின் தந்திரம். அந்த வகையில் தற்போது இந்தியை ஆயுதமாக்கி, மொழி ஊக்குவிப்பு என்ற கோஷத்தின் மூலம், இந்துத்துவா அமைப்புகள் நாட்டை துண்டாக்கி, வாக்கு வேட்டையாட முயற்சிக்க வாய்ப்புகள் உள்ளன.

இந்தி தெரிந்திருப்பது வேறு, அதை அமல்படுத்துவது வேறு. மக்கள் என்ன நடக்கிறது என்பதை அறிய முடியாத அப்பாவிகள் என்று ஆட்சியில் இருப்பவர்கள் நினைத்தால், தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வார்கள். மக்களை முட்டாளாக்க முடியாது என்பதை இந்தியை திணிக்க முயலும் அரசியல் தலைவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் அரசியலமைப்பின் அடிப்படை பலம் பன்மைத்துவம். இந்தி ஏகாதிபத்தியத்தை திணிப்பதாக கூறுவது நாட்டின் ஒற்றுமையைதான் குலைக்கும் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

முதலிடத்தில் பெங்காலி: இந்திய அரசியலமைப்பின் 8வது அட்டவணை யில் இந்தி உள்ளிட்ட 22 மொழிகள் பட்டியலிடப்பட்டு உள்ளன. இதனை அலுவல் ரீதியாக பயன்படுத்த முடியும். இந்திய அரசியலமைப்பு சட்டமானது, இந்தி உட்பட எந்த மொழியையும் தேசிய மொழியாக அங்கீகரிக்கவில்லை. 2011ஆம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்களின்படி, இந்தி தவிர 8ஆவது அட்டவணையில் உள்ள 21 மொழிகளைத்தான் 64 கோடி பேர் பேசுகின்றனர். இதில் முதலிடத்தில் பெங்காலி மொழி உள்ளது. நாட்டில், 8.03 வீதம் பேர் பெங்காலி பேசுகின்றனர். தமிழ் 4வது இடத்தில் உள்ளது.

---

# இந்தியாவில் நடந்து முடிந்த சில தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் முடிவுகள் சொல்வது என்ன?

இந்தியாவில் நடந்து முடிந்த சில தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வெற்றி தோல்விகள் ஆட்சி மாற்றத்திற்கு வழிகோலாது என்றாலும்கூட, அவற்றின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட முடியாது. இடைத்தேர்தலில் ஆளும்கட்சி வெற்றி பெறுவதற்கு பண பலமும், அதிகார துஷ்பிரயோகமும்தான் காரணம் என்று அறுதியிட்டுக் கூறிவிடவும் முடியாது. மக்கள் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்த இடைத்தேர்தலைக் கருவியாக பயன்படுத்திய நிகழ்வுகளும் ஏராளம் உண்டு.

சமீபத்தில் இந்தியாவின் மூன்று வெவ்வேறு பகுதிகளில் நடந்த சட்டப்பேரவைக்கான இடைத்தேர்தல்களின் முடிவுகள், ஒன்றிலிருந்து ஒன்று வித்தியாசப்படுகிறது. வடஇந்தியாவிலுள்ள உத்தரகண்டிலும், இந்தியாவின் கிழக்குப் பகுதியான ஒடிஸாவிலும் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் ஆளும்கட்சி அமோக வெற்றி பெற்றிருக்கிறது. இந்தியாவின் தென்கோடியிலுள்ள கேரளத்தில் ஆளும் இடதுசாரி முன்னணியைத் தோற்கடித்து எதிர்க்கட்சியான காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கிறது. மூன்று வெற்றிகளும் வெவ்வேறான செய்திகளை வழங்குகின்றன.

உத்தரகண்டின் சம்பாவத் பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிட்ட மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி 55,025 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறார். உத்தரகண்ட் வாக்காளர்கள் இதற்கு முன்பும் 'இடைத்தேர்தலில்' போட்டியிட்ட எந்தவொரு முதல்வரையும் தோற்கடித்ததில்லை. இந்த முறை முதல்வர் தாமி பெற்ற வெற்றி முக்கியத்துவம் பெறுவதற்குக் காரணம், இதற்கு முன்னால் எந்தவொரு முதல்வரும் சாதிக்க முடியாத வாக்கு வித்தியாசத்தில் வென்றிருப்பது.

கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்ற உத்தரகண்ட் சட்டப்பேரவைத் தேர்தலில் பெரும்பான்மை தொகுதிகளைக் கைப்பற்றி பாஜக ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டது. ஆனால், கதிமா தொகுதியில் போட்டியிட்ட முதல்வர் புஷ்கர் சிங் தாமி தோல்வியடைந்தார். அப்படியிருந்தும் அவரே மீண்டும் முதல்வராக்கப்பட்டபோது கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. அந்த விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுபோல அமைந்திருக்கிறது இப்போதைய சம்பாவத் இடைத்தேர்தலில் அவர் பெற்றிருக்கும் வெற்றி.

ஒடிஸாவின் பிரஜ்ராஜ்நகர் சட்டப்பேரவைத் தொகுதியிலிருந்து ஆளும் பிஜூ ஜனதா தள வேட்பாளர் அலகா மோஹந்தி 66,122 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறார். அவரது கணவரின் மரணத்தைத் தொடர்ந்து நடைபெற்ற இடைத்தேர்தல் இது. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளரை தோற்கடித்திருப்பது மட்டுமல்லாமல், பாஜக வேட்பாளரை மூன்றாவது இடத்திற்கு தள்ளியிருக்கிறார் அலகா மோஹந்தி. வேடிக்கை என்னவென்றால், இடைத்தேர்தல் நடைபெற்ற பிரஜ்ராஜ்நகர் சட்டப்பேரவைத் தொகுதி, 2019 மக்களவைத் தேர்தலில் பாஜக வெற்றி பெற்ற பர்கர் தொகுதிக்கு உட்பட்டது.

பிரஜ்ராஜ்நகர் இடைத்தேர்தல் வெற்றி முதல்வர் நவீன் பட்நாயக்கின் கரங்களை மேலும் வலுப்படுத்தி அவரது அசைக்க முடியாத தலைமைக்கு வலுசேர்த்திருக்கிறது. இந்த வெற்றிக்காகவே காத்திருந்தது போல, அனைத்து அமைச்சர்களையும் பதவி விலகச் சொல்லி தனது அமைச்சரவையை மாற்றி அமைத்திருக்கிறார் முதல்வர் நவீன்.

எதிர்க்கட்சிகளான காங்கிரஸாலும் பாஜகவாலும் அசைக்க முடியாத வலிமையுடன் திகழ்கிறது ஒடிஸாவில் நவீன் பட்நாயக் தலைமையிலான பிஜூ ஜனதா தளம். இதே நிலைமை தொடருமானால், 2024 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று, சுதந்திர இந்திய வரலாற்றில் மிக அதிகமான ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சியில் இருந்த முதல்வர் என்கிற சாதனைக்குரியவராக நவீன் பட்நாயக் உயரக்கூடும்.

ஏனைய இரண்டு சட்டப்பேரவை இடைத்தேர்தல்களையும்விட கௌரவப் பிரச்னையாகவும் முக்கியத்துவத்துடனும் பார்க்கப்பட்டது கேரளத்தின் திருக்காக்கரை தொகுதிக்கான இடைத்தேர்தல். கேரள சட்டப்பேரவையின் 140 தொகுதிகளில் ஒன்றுதான் திருக்காக்கரை என்றாலும்கூட, மாநில அளவில் திருக்காக்கரை இடைத்தேர்தல் பரபரப்பை அதிகரித்தது. காங்கிரஸ் உறுப்பினரும் முக்கியமான தலைவருமான பி.டி. தாமஸின் மறைவைத் தொடர்ந்து நடைபெற்ற திருக்காக்கரை இடைத்தேர்தலில் அவரது மனைவி உமா தாமஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியும் (யு.டி.எஃப்.), மார்க்சிஸ்ட் தலைமையிலான இடதுசாரி முன்னணியும் (எல்.டி.எஃப்.) இடைத்தேர்தல் வெற்றியை கௌரவப் பிரச்னையாக்கிக் களமிறங்கின. பல்வேறு மாநிலத்தவர்களும், கேரளத்தின் பல பகுதியில் இருந்து குடியேறியவர்களும் வசிக்கும் திருக்காக்கரை சட்டப்பேரவைத் தொகுதி, தொழிற்சாலைகளும், பல்கலைக்கழகம் உள்ளிட்ட கல்விச்சாலைகளும் நிறைந்த பகுதி. அதனால்தான் இடைத்தேர்தல் இந்த அளவு முக்கியத்துவம் பெற்றது.

இரண்டு முன்னணியைச் சேர்ந்த மாநிலத் தலைவர்கள், முன்னாள் இன்னாள் அமைச்சர்கள், எம்எல்ஏ-க்கள் என்று இருதரப்பு பிரமுகர்களும் திருக்காக்கரையில் குவிந்தனர். வீடு வீடாக ஏறி இறங்கி பிரசாரத்தில் ஈடுபட்டனர். வாக்காளர் பட்டியலில் 3,633 பேர் அதிகரித்தும்கூட, 2021 தேர்தலைவிட 1,228 வாக்குகள் குறைவாக பதிவானபோது தேர்தல் முடிவு குறித்த அச்சம் இருதரப்பினருக்கும் எழுந்தது.

அப்படியிருந்தும்கூட திருக்காக்கரையின் வரலாற்றில் இதுவரையில் இல்லாத வாக்கு வித்தியாசத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உமா தாமஸ் வெற்றி பெற்றிருக்கிறார். கேரள சட்டப்பேரவையில் காங்கிரஸூக்கு பெண் உறுப்பினரே இல்லை என்கிற குறை, உமாவின் வெற்றியால் அகற்றப்பட்டிருக்கிறது. தொடர்ந்து தோல்வியை மட்டுமே சந்தித்து வரும் காங்கிரஸ் கட்சிக்கு, திருக்காக்கரை இடைத்தேர்தல் முடிவு ஆறுதல் அளிக்கக்கூடும்.



# பொருளாதார நெருக்கடியால் இறுதி நிகழ்வுகளைக் கூட நடத்துவது கடினமாக உள்ளது!

## ‘தேசய’ சிங்கள வார ஏடு கவலை

சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் எரிபொருள் நெருக்கடியால் இறந்த மனிதனின் இறுதி நிகழ்வுகளைக் கூட நடத்துவது தற்போதைய காலகட்டத்தில் மிகவும் கடினமான ஒரு பணியாக மாறியுள்ளதாக ‘தேசய’ சிங்கள வார ஏடு கவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக் கிழமை வெளிவந்த அதன் வார ஏட்டில் வெளிவந்த கட்டுரையின் முழு தமிழ் வடிவம்:

என் வாழ்வின் கடினமான காலங்களில் இதுவும் ஒன்று. அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களின் விலையும் மிக அதிகமாக இருக்கும் நிலையில், பல பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. அதன்படி இந்த நாட்டில் வாழும் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

இதற்கிடையில், வாழும் காலத்தில் மட்டுமல்ல, சுகமாக சாக முடியாத நிலையிலும். இன்று இறுதி நிகழ்வுகளை நடத்துவதற்கு சிறிலங்கா கடினமான காலத்தை எதிர்கொண்டுள்ளது.

தற்போது சிறிலங்காவில் ஐநூறுக்கும் அதிகமான பெரிய அளவிலான இறுதி நிகழ்வு நிலையங்கள் தீவு முழுவதும் பரவி உள்ளன.

இந்த இறுதி நிகழ்வு சேவை அத்தியாவசிய சேவையை வழங்குகிறது. எனினும் இன்று இந்த சேவையை முறையாக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமைக்கு பல காரணங்கள் உள்ளன என்று அகில சிறிலங்கா இறுதி ஊர்வல இயக்குநர்கள் சங்கத்தின் தலைவர் மகிந்த பனாகொட தெரிவித்துள்ளார்.

உடலை அடக்கம் செய்வது இறுதிச் நிகழ்வுகளின் முக்கிய பகுதியாகும். உடலை சில நாட்கள் வைத்திருக்க மருந்து கொடுக்க வேண்டும். மூன்று மாதங்களுக்கு முன்பு 30 லீற்றர் ஃபார்மலின் விலை 9,500 ரூபாயாக இருந்தது.

ஆனால், அதன் தற்போதைய விலை 16,500 ரூபாய். கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஒரு சில முக்கிய இறுதி நிகழ்வு நிலையங்களைத் தவிர, மற்ற பல இறுதி நிகழ்வு நிலையங்கள் மாநில வர்த்தக சம்மேளனத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஃபார்மலின் பயன் படுத்துகின்றன.

கடந்த காலங்களில் அவற்றுக்கு தட்டுப்பாடு இருந்ததால் தற்போது பற்றாக்குறை ஓரளவு குறைந்தாலும் அதன் விலை மிக அதிகமாக உள்ளது. சிறு சவ அடக்க தொழில் முனைவோர் இதை பயன்படுத்தினாலும், கொழும்பு மாவட்டத்தில் உள்ள பல இறுதி ஊர்வல இயக்குநர்கள் இதற்காக பல்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு இரசாயனங்களை பயன்படுத்துகின்றனர்.

மொறட்டுவ தச்சுத் தொழிலுக்கு பெயர் பெற்ற நகரமாக அறியப்படுகிறது. மொறட்டுவவில் சவப்பெட்டிகள் பெரும்பாலும் தயாரிக்கப்படுகின்றன. அந்த நகரத்தில் இருந்து உலகின் பல பகுதிகளுக்கு நாளாந்தம் சவப்பெட்டிகள் கொண்டு செல்லப்படுகின்றன. ஆனால், இன்று இந்த தொழில் மிகவும் நெருக்கடியான நிலையில் உள்ளது.

இன்று மரத்தின் விலை மிக அதிகமாக உள்ளது. மேலும், மரங்களை கண்டுபிடிக்க முடியாமல், அதனை கொண்டு செல்வதற்கு தேவையான எரிபொருள் இல்லாததால், இந்த தொழில் பெரும் நெருக்கடியை சந்தித்து வருகின்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு 5,000 ரூபாவாக இருந்த சவப்பெட்டியின் விலை தற்போது 10,000 ரூபாவாக உள்ளது.

சவப்பெட்டிகள் இறப்பரால் ஆனது என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் இறப்பர் மரத்தில் பெட்டிகளை உருவாக்க முடியாது. ஒரு றப்பர் குச்சி சவப்பெட்டியை பலப்படுத்தாது.

எனவே, அல்பிசியா, ருகட்டானா, மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மரக்கட்டைகள் இதற்குப் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. கூடுதலாக, சவப்பெட்டிகள் மஹோகனி மற்றும் சாடின் போன்ற மரங்களால் செய்யப்படுகின்றன, அவை மிகவும் விலை உயர்ந்தவை.

ஒரு பெட்டியை உருவாக்குவதுடன் முடிவதில்லை. அது மெத்தையாக இருக்க வேண்டும். அதை மெருகூட்ட வேண்டும். வெவ்வேறு பாகங்கள் பொருத்தப்படல் வேண்டும். இவை அனைத்தின் விலையும் ஏற்கனவே மிக அதிகமாக உள்ளது. பெட்டிக்குரிய சாடின் துணி கூட இறக்குமதி செய்யப்படுகிறது.

இறுதி நிகழ்வுகளில் மட்டுமின்றி திருமணங்களிலும் பூக்களுக்கு தனி இடம் உண்டு. இன்று இறுதி நிகழ்வுகளில் மாலைகள் பிரதானமாக இருந்தாலும் அவற்றின் விலை மிக உயர்ந்தவை.

பூக்கள் தட்டுப்பாடு இன்று நேற்றல்ல. உரம் இறக்குமதியை அரசு நிறுத்தியதால், ஓராண்டுக்கு முன் பூக்கள் தட்டுப்பாடு ஏற்பட்டது. காய்கறிகள், நெல் வயல், பழங்களுக்கு இரசாயன உரம் இடுவது ஏற்புடையதல்ல, பூச்செடிகளுக்கும் தடை விதிப்பது நடைமுறையில் இல்லை என்று கூறி உர இறக்குமதியை நிறுத்தியுள்ளது அரசு.

ஆனால், பூக்களுக்கும் இரசாயன உரங்களை இடுவதை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. விரைவில் பூக்கள் சரியான, ஆரோக்கியமான பூக்களை உற்பத்தி செய்யவில்லை. ஓர்க்கிட், ஐந்தூரியம் போன்ற பூக்கள் இறக்குமதி செய்யப்பட்டாலும், இரசாயன உரங்கள் நிறுத்தப்பட்டதால், அந்த தொழிலதிபர்கள் அனைவரும் தங்கள் வியாபாரத்தை நிறுத்த வேண்டியிருந்தது.

வெளிநாடுகளுக்கு பூக்களை விநியோகம் செய்து வந்த பல தொழிலதிபர்கள் இன்று தங்கள் தொழில் முயற்சிகளை கைவிட்டுள்ளனர். மலையகப் பிரதேசங்களான தியத்தலாவை, பண்டாரவளை, பதுளை, நுவரெலியா போன்ற பிரதேசங்களில் அதிகளவான பூச்செடிகள் பயிரிடப்பட்ட மக்கள் அதிகளவான ஏக்கர் நிலங்களில் சுயதொழில் செய்கின்ற போதிலும், இன்று அதெல்லாம் நஷ்டமடையும் தொழிலாக மாறியுள்ளது.

பூக்களுக்கு இரசாயன உரம் போடாததால், பூக்கள் சரியான தோற்றம் மற்றும் அளவு இல்லாததால், தொழில் நலிவடைந்து வருகின்றது. இன்று இந்த தொழில் வீழ்ச்சியடைந்தமைக்கு பிரதான காரணங்களில் ஒன்று மலையகத்திற்கு விளையும் இந்த மலர்களை தீவு முழுவதும் கொண்டு செல்வதற்கான எரிபொருள் பற்றாக்குறையாகும்.

இந்த காரணங்களால், இன்று இறுதி நிகழ்வுகளுக்கு பூக்கள் கிடைக்கவில்லை. பூக்களுக்கு இரசாயன உரம் போடாததால், பூக்கள் சரியான தோற்றம் மற்றும் அளவு இல்லாததால், தொழில் நலிவடைந்து வருகின்றது.

எரிவாயு பற்றாக்குறையும் இறுதி நிகழ்வுகளை பாதிக்கும் ஒரு முக்கிய காரணியாகும். சில சுடுகாடுகளில் எரிவாயு தட்டுப்பாடு உள்ளது. இதனால் விறகு முறையிலான தகனங்களுக்கு மாற்றப்படல் வேண்டும் அல்லது உடலங்களை அடக்கம் செய்ய வேண்டும். தகனம் செய்ய நேரம் ஒதுக்கிய பிறகு எரிவாயு பற்றாக்குறையால் சில உடலங்களை இன்னும் இரண்டு நாட்களுக்கு சுடுகாட்டில் வைக்க வேண்டிய அவல நிலையும் ஏற்படுகின்றது.

சுடுகாடுகளுக்கு எரிவாயு பற்றாக்குறை ஒரு கடுமையான பிரச்சனை. இது எங்கள் தொழிலை பெரிதும் பாதித்துள்ளது. எரிவாயு தட்டுப்பாடு காரணமாக இன்று சில தகன நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என்று பனாகொட தெரிவித்துள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இறுதி ஊர்வலங்கள் செய்வது நிறுத்தப்பட்டு விட்டது. அதன்படி இன்று சில இறுதி நிகழ்வு செய்யும் நிலையங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சில வாகனங்கள் தற்போது பழுதடைந்துள்ளன. அவற்றை பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. வாகனங்களின் இறக்குமதி நிறுத்தப்பட்ட பின்னர் இறுதி ஊர்வலங்கள் செய்யப்படுவதில்லை.

கடந்த காலங்களில், மனித கைகளால் உடலங்கள் கல்லறைகளுக்கு கொண்டு செல்லப்பட்டன. தொலை தூரத்தில், உடலங்களையும் வாகனங்கள் மூலம் எடுத்துச் சென்றனர். ஆனால், தற்போது இறுதி ஊர்வலத்தில் உடலை எடுத்துச் செல்ல முடியாது. வாகனப் பற்றாக்குறை மற்றும் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினையால் இது கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.


தனியார் வாகனங்களில் உடல்களை கொண்டு செல்வதை யாரும் விரும்புவதில்லை. எனினும், இறுதி ஊர்வலத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் சாதாரண வாகனத்தில் உடலம் கொண்டு செல்லப்பட வாய்ப்புள்ளது.

தற்போதைய எரிபொருள் நெருக்கடியும் இறுதி நிகழ்வுகளுக்கு பெரும் தடையாக உள்ளது. உடலை சம்பந்தப்பட்ட இடங்களுக்கு கொண்டு செல்ல முடியாத நிலையும் உள்ளது. குறிப்பாக வெளியூர்களுக்கு உடலைக் கொண்டு செல்லும் போது இது பெரும் பிரச்சனையாக உள்ளது. இந்த எல்லா காரணிகளாலும், இறுதி நிகழ்வு சேவை மிகவும் கடினமான தொழிலாக மாறியுள்ளது. •




# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, .............., ............ ii) 18, 15, 12, .............., ............

21) | 3, 9, 6, 14, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3l 300ml பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

..................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



..................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.................................. (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6 2) 8 **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130 2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745 **23.** 455
**24.** 1l 100ml / 1100ml **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190 2) 100 3) 290
**27.** 15 : 30 **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1 **31.** 2 **32.** 3
**33.** 2 **34.** 3 **35.** 2

## கல்வி tv CHANNEL-1

**09.06.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**09.06.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# 14, 700 ஏக்கர் விவசாய காணிகளையும் அரசாங்கம் உடன் விடுவிக்கவேண்டும்

## காணி உரிமைக்கான அம்பாறை செயலணி கோரிக்கை

அம்பாறை, ஜுன் 09

**அம்பாறை மாவட்டத்தில் பிடித்து வைத்திருக்கின்ற 14, 700 ஏக்கர் விவசாய காணிகளையும் அரசாங்கம் உடன் விடுவித்து தரவேண்டும் என்று மனித எழுச்சி நிறுவனத்தின் பணிப்பாளரும், காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் அமைப்பாளருமான நிஹால் அஹமட் கோரிக்கை விடுத்துள்ளார்.**

சம்மாந்துறையில், பாதிக்கப்பட்டுள்ள விவசாய குடும்பங்களுக்கு விழிப்பூட்டல், அறிவூட்டல், வழிகாட்டல் ஆகியவற்றை மேற்கொள்கின்ற வகையில், மனித எழுச்சி நிறுவனம், காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணி ஆகியவற்றால் கடந்த திங்கட்கிழமை மாலை கூட்டம் நடத்தப்பட்டது.

இது தொடர்பாக நிஹால் அஹமட் தெரிவிக்கையில்-

அடுத்த மாதங்களில் பாரிய பட்டினி ஏற்பட்டு விடும் என்று அரசாங்கமே கூறுகின்றது. என்றுமில்லாதவாறு உணவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விடும் என்று நியாயமான அச்சத்தை வெளியிட்ட வண்ணம் உள்ளார்கள்.

இதனால் விவசாயச் செய்கையில் மிக அதிக அளவில் ஈடுபடுங்கள் என்று ஜனாதிபதி, பிரதமர், விவசாய அமைச்சர் உள்ளிட்ட அரசாங்க தரப்பினர் அனைவருமே பொதுமக்களை மீண்டும் மீண்டும் கோரிய வண்ணம் உள்ளார்கள்.

விவசாயிகள் மீது கை வைத்த காரணத்தாலேயே நாடு இன்று இவ்வளவு பாரிய நெருக்கடிக்குள் சிக்கி தவிக்க நேர்ந்துள்ளது. வயிறுகள் காய்ந்த காரணத்தால் தான் வெடித்த போராட்டங்கள் அரசாங்கத்தை ஆட்டம் காண வைத்திருக்கின்றன.

அம்பாறை மாவட்ட விவசாயிகள் மீது அரசாங்கம் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக கை வைத்திருக்கின்றது. உள்நாட்டு மோதல் காலம் தொட்டு மூவின மக்களினதும் காணிகள் அரசாங்கத்தால் நுட்பமான முறைகளில் பிடித்து வைக்கப்பட்டு உள்ளன.

4657 குடும்பங்களின் 14700 ஏக்கர் விவசாயக் காணிகள் இவ்விதம் பிடிக்கப்பட்டு உள்ளன. பாணமை முதல் மல்வத்தை வரை இராணுவம், சீனித் தொழிற்சாலை, ஓட்டுத் தொழிற்சாலை, வனவள பாதுகாப்புத் திணைக்களம், வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் போன்ற அரசாங்க கட்டமைப்புகளால் விவசாய காணிகள் பிடித்து வைக்கப்பட்டுள்ளன.

மனித எழுச்சி நிறுவனம், காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணி ஆகிய எமது அமைப்புகள் பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு உரிய நீதியை பெற்று கொடுக்க நீண்ட காலமாக இதய சுத்தியுடன் பலவிதமான பகீரத முன்னெடுப்புகளையும் மேற்கொண்டு வந்திருக்கின்றோம். அவை நம்பிக்கை ஊட்டுகின்ற வகையில் உள்ளன.

கோட்டா கோ கம உள்ளிட்ட அண்மைய போராட்டங்கள் வெற்றி கண்டு வரும் நிலையில் எமது விவசாயிகளின் நீண்ட காலப் போராட்டங்கள் ஏன் வெற்றி பெறமுடியாது? அதற்கான தருணம் தற்போது கனிந்து இருக்கின்றது.

விவசாயத்தில் ஈடுபடுங்கள் என்று கோரி கொண்டிருக்கும் அரசாங்கத்திடம் எமது விவசாய காணிகளைத் திரும்ப தாருங்கள் என்று கேட்டுப் பெறக்கூடிய வியூகத்தை நாம் முன்னெடுக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

விவசாய நிலங்களை அரசாங்கம் விவசாயிகளுக்கு திரும்ப வழங்கவேண்டும். இவ்வாறு வழங்குவதன் மூலம் விவாயிகளுக்கு மட்டும் அல்ல நாட்டுக்கும், அரசாங்கத்துக்கும் கூட நிச்சயம் வெற்றி கிடைக்கும்-என்றார். (அ)





# கல்முனை கார்மேல் பற்றிமா மாணவர்களின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கண்காட்சி

அம்பாறை, ஜுன் 09

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் கல்வி பயிலும் தரம் - 6 தொடக்கம் தரம் - 11 வரையிலான மாணவர்களினால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரயோக கண்காட்சி நேற்று கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் எஸ். சந்தியாகு தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் கலந்து கொண்டதுடன் மேலும் கௌரவ அதிதிகளாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் வீ.ஹிகானா அலீப், உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் சாதுல் அமீன், கோட்டக்கல் விப்பணிப்பாளர் எஸ்.சரவண முத்து, இளம் கண்டுபிடிப்பாளர் சோ. வினோஜ்குமார் உட்பட விஞ்ஞான பாட ஆசிரியர்க ளும் கலந்துகொண்டனர்.இக் கண்காட்சியில் சுமார் 250க்கு மேற்பட்ட மாணவர்களின் படைப்புக்கள் பிரயோக ரீதியாக கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

கல்லூரி முதல்வர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு கருத்து தெரிவிக்கையில்-

பாடசாலை விடுமுறைக்கு முன்னரே மாணவர்களுக்கு இக்கண்காட்சிக்கான படைப்புக்களை உருவாக்குவது பற்றிய விழிப்புணர்வுகளை நடத்தியிருந்தோம். அதனால் மாணவர்களும் தங்களது விடுமுறைக் காலத்தை இவ்வாறான ஆக்கப் படைப்புக்களுக்காக செலவளித்தது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இதற்காக ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமெனில் புதிய கண்டுபிடிப்புக்கள் மிக முக்கியமானவை. இக்கண்காட்சியில் உள்ள புத்தாக்கங்களைத் தெரிவு செய்து அவர்களை பயிற்றுவித்து, அக்கண்டுபிடிப்புக்களை தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளுக்கு அனுப்புவதே இதன் பிரதான நோக்கமாகும். இந்த நோக்கத்திற்காக எங்களுடன் இணைந்து பணியுரியும் அனைவருக்கும் நன்றிகளை கல்லூரி சார்பாக தெரி வித்துக் கொள்கிறேன்- என்றார் . (அ)

# டெங்கு நோயின் தாக்கம் மட்டக்களப்பில் அதிகரிப்பு

மட்டக்களப்பு, ஜுன் 09

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்து வரும் நிலையில், கடந்த மே 22 ஆம் திகதி தொடக்கம் ஜுன் 03 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 28 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த வாரத்தில் டெங்கு தாக்கத்தினால் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 நோயாளர்களும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 நோயாளர்களும், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 06 பேரும், கோறளைப்பற்று மத்தி, களுவாஞ்சிகுடி மற்றும் ஆரையம்பதி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா 01 நோயாளர்களுமாக மொத்தமாக 28 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை வாழைச்சேனை, காத்தான்குடி, பட்டிப்பளை,வவுணதீவு, வாகரை, வெல்லாவெளி, ஓட்டமாவடி மற்றும் கிரான் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் குறித்த காலப்பகுதிக்குள் இனங்காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ் வருடத்தில் இதுவரை காலப்பகுதிக்குள் 542 பேர் டெங்குநோய்த் தாக்கத்திற்குட்பட்டுள்ளதாகவும், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இவ்வரு டத்தில் மாத்திரம் 238 பேர் டெங்கு நோய்த் தாக்கத்திற் குட்பட்டுள்ளதுடன், 02 பேர் மரணமடைந்துள்ளதாகவும், அதிக டெங்கு நோயாளர்களை இனங்கண்ட பிரிவாக மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு காணப்படுவதாகவும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜீ. சுகுணன் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கிக்கிடக்கும் குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு இடம் கொடுக்காத வகையில் சூழலை துப்பரவாக வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். (அ)

# இலவசமாக மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் குச்சவெளியில்

திருமலை, ஜுன் 09

குச்சவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் மின்சார இணைப்பின்றி வாழும் குடும்பங்களுக்கும், மிக கஷ்டப்பட்ட நிலைமையில் வாழும் குடும்பங்களுக்கும் இலவசமாக மண்ணெண்ணெய் வழங்கும் திட்டமொன்று குச்சவெளி பிரதேச சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் அத்தியவசியப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக மிக கஷ்ட நிலைமையில் வாழ்ந்து வரும் குடும்பங்கள், பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களுள், மின்சார வசதியற்று வாழும் குடும்பங்களுக்கு வீட்டுத் தேவைக்கான மண்ணெண்ணெயை இலவசமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அதன் ஆரம்ப கட்டமாக புல்மோட்டை பிரதேசத்துக்கு வழங்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் தவிசாளர் மேலும் கூறினார்.

குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில், இந்நிலைமையில் வாழும் குடும்பங்கள் தங்களின் தகவல்களை புல்மோட்டை உப அலுவலக தவிசாளர் காரியாலயத்திற்கு (திரு மலை சந்தி) வருகை தந்து பதிவு செய்துகொண்டு மண்ணெண்ணெய்க்கான ரோக்கன் அனுமதியை பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு





# எந்த நேரத்திலும் வடகொரியா அணுகுண்டு சோதனை நடத்தும்

## அமெரிக்க அதிகாரி எச்சரிக்கை

பியொங்யாங், ஜூன். 09

வடகொரியா எந்த நேரத்திலும் ஏழாவது அணு குண்டு சோதனையை நடத்தலாம் என அமெரிக்க அதி காரி ஒருவர் எச்சரித்துள்ளார்.

வடகொரியா கடந்த ஞாயிற்றுக்கிழமை எட்டு பாலிஸ்டிக் ஏவுகணைகளை சோதனை செய்து சாதனை படைத்துள்ளது.

இந்நிலையில் வட கொரியாவுக்கான அமெரிக்க விசேட பிரதிநிதி சுங் கிம் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அத்தகைய அணு ஆயுதச் சோதனைக்கு "விரைவான மற்றும் வலிமையான பதில்" அளிக்கப்படும் என அமெ ரிக்க இராஜாங்க பிரதிச் செயலாளர் வெண்டி ஷெர்மன் தெரிவித்துள்ளார்.

வடகொரியா கடந்த ஐந்து ஆண்டுகளாக அணு ஆயுத சோதனையை நடத்தவில்லை என்றாலும் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்து வருகிறது. (அ)

# ஜேர்மனியில் 5 வருடம் வசிப்போர் நிரந்தர வதிவிட அனுமதி பெறுவர்

## புதிய சட்ட வரைவு விரைவில் வரும் ஒரு லட்சம் பேர் பயன்பெற வாய்ப்பு



பேர்லின், ஜூன். 09

ஜேர்மனியில் புகலிடம் மறுக் கப்பட்டவர்கள் நாட்டில் தொடர்ந் தும் தங்கி வாழ வாய்ப்பளிக்கப்பட வுள்ளது.

ஜேர்மனியின் உள்துறை அமைச்சர் நான்ஸி ஃபேசர் நாட் டின் வதிவிட உரிமைக்கான புதிய சட்டப் பிரேரணை ஒன்றை விரை வில் சமர்ப்பிக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்.

ஐந்து வருடங்கள் அல்லது அதற்கு மேல் சகிப்புத்தன்மையு டன் நாட்டில் வசிக்கின்ற புலம்பெயர்ந்த வர்களுக்கு நிரந்தர மாக - சட்டபூர்வமாகத் - தங்கு வதற்கான வாய்ப்பை வழங்குவதே இதன் நோக்கம் என்று அவர் கூறியி ருக்கிறார். அதேசமயம் புகலிடம் நிராகரிக்கப்பட்டவர்களில் சட்டத் துக்குட்பட்டு நடக்காத புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்து வதில் தொடர்ந்து கடும் போக்குக் கடைப்பிடிக் கப்படும் என்றும் அவர் உறுதி படத் தெரிவித்திருக்கிறார்.

புதிய வதிவிடச் சட்டத்தின் படி புகலிடம் மறுக்கப்பட்ட பிறகும் சகிப்புத் தன்மையுடன் நாட் டில் ஐந்து ஆண்டுகள் வசித்த வர்களுக்கு முதலில் ஒரு வருட தகுதிகாண் குடியிருப்பு அனு மதி தரப்படும். அக்காலப் பகுதியில் அவர்கள் ஜேர்மனிய மொழியில் தங்களது திறமையை நிரூபிக்கவேண்டும். அத்துடன் தங்கள் வாழ்வாதாரத்தைப் பாது காத்துக் கொள்பவர்களாக இருத் தல் அவசியம். அவ்வாறானவர்க ளுக்குப் பின்னர் நாட்டில் சட்ட பூர்வமாக - நிரந்தர மாகத் - தங்குவ தற்கான உரிமை வழங்கப்படும். தங்களைப் பற்றிய தவறான தகவல் களை வழங்கிய புலம்பெயர்ந்த வர்கள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் இந்த வாய்ப்பில் இருந்து விலக்கி வைக்கப்படுவர்.

இந்தப் புதிய சட்டத்தின் மூலம் ஜேர்மனியில் "டுல்டங்" என்னும் சட்டபூர்வமற்ற வதிவிட அனு மதியை வைத்திருக்கின்ற சுமார் ஒரு லட்சம் பேர் பயனடைவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மனியின் 'சமிக்ஞை விளக்கு'க் கூட்டணி அரசு அதன் கூட்டணி உடன்படிக்கையில் ஏற்கனவே உறுதி அளித்திருந்த குடி யேற்ற வாசிகள் தொடர்பான கொள்கைக்கு அமையவே இந்தப் புதிய வதிவிட அனு மதிச் சட்ட வரைவு சமர்ப்பிக்கப் படவுள்ளது. (அ)

# உக்ரைனின் செவிரோடொனெட்ஸ்க் நகரை குண்டுகளால் துளைத்தெடுக்கின்றது ரஷ்யா

## கைப்பற்றும் முயற்சி தீவிரம்



கீவ், ஜூன். 09

டொன்பாஸ் பிராந்தியத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டில் இருக்கும் மிகப்பெரிய தொழில் நகரமான செவிரோடொ னெட் ஸ்க் நகரைக் கைப்பற்றும் நோக் கில் ரஷ்யா கடும் தாக்குதல் களை மேற்கொண்டு வரும் நிலை யில் நகரில் இன்னமும் தமது படைகள்கடும்எதிர்ப்பை வெளிப் படுத்தி வருவதாக உக்ரைன் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் கிழக்கு டான் பாஸில் தனது இராணுவத்தை ரஷ்யா மேலும் குவித்து நகரை முழுமையாகக் கைப்பற்றும் நோக்கில் உக்கிர தாக்குதல் களை நடத்தி வருகிறது.

செவிரோடொனெட்ஸ்க் நகரை ரஷ்ய படைகள் குண்டு களால் துளைத்தெடுத்து வரு வதாக லுஹான்ஸ்க் மாகாண ஆளுநர் செர்ஹி ஹைடாய் வேதனையுடன் தெரிவித்தார்.

ரஷ்ய படைகளின் குண்டு மழையில் அந்த நகரின் முக்கிய உட்கட்டமைப்புகள் அழிக்கப் பட்டு வருவதாகவும் அவர் கூறி னார்.

ரஷ்ய படைகளின் தாக்குதல் களால் செவிரோடொனெட்ஸ்க் நகரில் மின்சாரம் மற்றும் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ள தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இடைவிடாமல் தொடரும் தாக்குதல்களால் அந்த நகரில் இருந்து வெளி யேற முடியாமல் மக்கள் பெரும் பீதிக்கும் அவதிக்கும் உள்ளாகியுள்ளனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

இப்படி பல முனைகளிலும் இருந்தும் தாக்குதல்களை எதிர் கொண்டு வருவதால் செவிரோ டொனெட்ஸ்க் நகரம் உக்ரை னின் மற்றொரு மரியுபோல் நகரமாக மாறும் விளிம்பில் இருப்பதாக அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனிடையே செவிரோ டொனெட்ஸ்க் நகரில் ரஷ்ய படைகள் நேற்று காலை நடத் திய பீரங்கி குண்டு தாக்குதலில் 2 பேர் பலியானதாகவும், 5 பேர் படுகாயமடைந்ததாகவும் அந்த நகரின் மேயர் தெரி வித்தார். (அ)



# வரி குறைப்பு அழுத்தத்தை எதிர்கொள்ளும் ஜோன்சன்!

லண்டன், ஜூன். 09

நம்பிக்கை வாக்கெடுப்பில் இருந்து தப்பிய பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன், தற்போது வரிகளை குறைக்க வேண்டும் என்ற அழுத்தத்தை எதிர்கொண்டுள்ளார்.

நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றமை கன்சர்வேட் டிவ் கட்சியில் ஒற்றுமையை மீண்டும் கட்டியெழுப்பவும் வாழ்க்கைச் செலவு குறையும் என்றும் நம்புகின்றனர்.

வாக்கெடுப்பில், பிரதமர் பொரிஸ் ஜோன்சன் 211 எம். பிக்களின் ஆதரவைப் பெற்ற அதே நேரத்தில் அவரை நீக்க 148 வாக்குகள் கிடைத்தன.

அவருக்கு கிடைத்த எதிரான வாக்கு, பரவலாக எதிர்பார்க்கப் பட்டதைவிட அதிக எண் ணிக்கை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது தனது கட்சி முழுவதிலும் உள்ள எம்.பிக்களை ஈர்க்கும் கொள் கைகளை அறிவிக்கவேண்டிய அழுத்தத்தை பிரதமர் பொரிஸ் ஜோன்சன் எதிர்கொள்கிறார்.

எனவே அடுத்த வரவு - செல வுத் திட்டத்தில் முதலீட்டை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் வணிக நிறுவனங்களுக்கு சில வரிக் குறைப்புகள் அறிமுகமா கும் என எம்.பிக்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (அ)

# தலிபான்களுக்கு ஐ.எஸ். எச்சரிக்கை

காபூல், ஜூன். 09

ஆப்கானிஸ்தானின் தமது கட்டுப்பாட்டை வலுப்படுத்து வதற்காக ஐ.எஸ் மற்றும் தேசிய எதிர்ப்பு முன்னணி, தலிபான் கள் மீதான தமது தாக்குதல் களை தீவிரப்படுத்தவிருப்பதாக வொஷிங்டன் போஸ்ட் வெளி யிட்ட செய்தியில் கூறப்பட் டுள்ளது.

ஐ.எஸ் மற்றும் ஆப்கானின் முன்னாள் பாதுகாப்பு படை யினரின் கெரில்லா தாக்குதல் கள் தலிபான்களுக்கு பிரதான அச்சுறுத்தலாக இருப்பதாக அந்த செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்நிலையில் தலிபான்கள் தமது ஆட்சி முறை மற்றும் நடத்தை மீதான நம்பிக்கை அடிப்படையில் கடும்போக்கா ளர்கள் மற்றும் சீர்திருத்தவாதி கள் என பிளவுபட்டிருப்பதாக வும் அந்த பத்திரிகையில் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)



# நபிகளை அவமதித்தால் தற்கொலைத் தாக்குதல்!

## இந்தியாவுக்கு அல்ஹைடா மிரட்டல்

புதுடில்லி, ஜூன். 09

நபிகளை அவமதித்தால் தற் கொலைப்படை தாக்குதல் நடத்துவோம் என அல்ஹைடா பயங்கரவாத இயக்கம் இந்தி யாவுக்கு எச்சரிக்கை விடுத்துள் ளது.

பா.ஜ.வின் நுபுர் சர்மா, நவீன் ஜிந்தால் ஆகியோர் இஸ் லாமிய மதக் கடவுளின் இறை தூதரான முகமது நபிகள் குறித்து சர்ச்சை கருத்து கூறியுள் ளனர். இதற்கு பல இஸ்லாமிய நாடுகள் கண்டனம் தெரிவித்த னர்.

இதனையடுத்து இருவரை யும் பா.ஜவின் அடிப்படை உறுப்பினர் பதவிகளில் இருந்து கட்சி மேலிடம் நீக்கியது. இந்த நிலையில், முகமது நபிகள் குறித்து கருத்து தெரிவித்ததற் காக இந்தியா மீது தற் கொலைப்படை தாக்குதல் நடத்துவோம் என அல்ஹைடா பயங்கரவாத இயக்கம் எச்ச ரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அல் கொய்தா வெளியிட்ட கடிதத் தில், நபிகளின் கண்ணியத்தை காப்பதற்காக டில்லி, மும்பை, உத்தரபிரதேசம், குஜராத் ஆகிய பகுதிகளில் நாங்கள் தற் கொலைப்படை தாக்குதல் களை நடத்துவோம். தங்கள் முடிவுக்காக டில்லி, மும்பை, உத்தரபிரதேசம், குஜராத்தை சேர்ந்த பயங்கரவாதிகள் தங்கள் முடிவுக்காக காத்திருக்க வேண் டும்' என தெரிவிக்கப்பட்டுள் ளது.

அல்ஹைடாவின் இந்த மிரட்டல் கடிதம் நாடு முழுவ தும் பெரும் பரபரப்பை ஏற் படுத்தியுள்ளது. (அ)

# 10 விக்கெட்டால் இலங்கையை இலகுவாக வீழ்த்தியது ஆஸி.!

கொழும்பு, ஜூன் 09

இலங்கைக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியில் அவுஸ்திரேலிய அணி 10 விக்கெட்களால் இலகு வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய அணி கிரிக்கெட் தொடருக்காக இலங்கை வந்துள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது இருபது - 20 போட்டி நேற்று முன்தினம் கொழும்பு பிரேமாஸ அரங்கில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனால் இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்கம் கொடுத்த பதும் நிஸங்க - தனுஷ்க குணதிலக இணை ஓரளவுக்கு சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். தனுஷ்க குணதிலக 15 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 26 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

அவரின் பின்னர் வந்த சரித அசலங்க பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனிடையே 36 ஓட்டங்களை எடுத்த பதும் நிஸங்க ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் வந்த வீரர்கள் எவரும் நிலைக்கவில்லை. வந்த வேகத்திலேயே அவர்கள் பெவிலியன் திரும்ப அசலங்க பொறுமையாக ஆடினார்.

எனினும், அவருக்கு வனிந்து ஹசரங்க ஓரளவுக்கு பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்கினார். ஹசரங்க 17 ஓட்டங்களுடனும், அசலங்க 38 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த வீரர்களும் சோபிக்காத நிலையில், 19.3 ஓவர்களில் 128 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது இலங்கை அணி.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில், ஹசல்வூட் 4, மிற்செல் ஸ்ரார்க் 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 129 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடியது அவுஸ்திரேலிய அணி.

தொடக்க வீரர்களான அரோன் பின்ஞ், டேவிட் வோர்ணர் ஆகியோர் இறுதிவரை ஆட்டமிழக்காது இலங்கையின் பந்துகளை துவம்சம் செய்தனர்.

அவுஸ்திரேலிய அணி விக்கெட் இழப்பின்றி 100 ஓட்டங்களை அண்மித்துக்கொண்டிருந்தபோதே இரசிகர்கள் பெரும் ஏமாற்றத்துடன் அரங்கை விட்டு வெளியேற ஆரம்பித்தனர்.

அவுஸ்திரேலியா 12ஆவது ஓவரில் விக்கெட் இழப்பின்றி 101 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது இரவு



10.05 மணியளவில் மழை பெய்ததால் ஆட்டம் தடைப்பட்டது. தொடர்ந்து, 10.55 மணிக்கு ஆட்டம் மீண்டும் தொடர்ந்தது.

வெற்றிக்கு தேவைப்பட்ட எஞ்சிய 28 ஓட்டங்களை 14 பந்துகளில் அவுஸ்திரேலியா பெற்றது.

டேவிட் வோர்ணர் 44 பந்துகளில் 9 பௌண்ட்ரிகளுடன் 70 ஓட்டங்களையும் அரோன் பின்ஞ் 40 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகள் அடங்கலாக 61 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இலங்கைக்கு எதிராக கடந்த 5 போட்டிகளில் வோர்ணர் தொடர்ச்சியாக 50 ஓட்டங்களுக்கு மேல் குவித்த தன் மூலம் அரிய மைல்கல் சாதனை ஒன்றை நிலைநாட்டினார். 2019ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான 3 தொடர்ச்சியான போட்டிகளில் 100 ஓட்டங்களையும் 60 ஓட்டங்களையும் 57 ஓட்டங்களையும் பெற்றதுடன் அந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் ஆட்டமிழக்காதிருந்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் கடந்த வருடம் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான இருபது - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் வோர்ணர் 85 ஓட்டங்களைக் குவித்தார். இப்போது ஆர்.பிரேமதாச அரங்கில் 70 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் அவுஸ்திரேலிய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

(ஐ)



# மிதாலி ராஜ் ஓய்வு

புதுடில்லி, ஜூன் 09

இந்திய கிரிக்கெட் வீராங்கனை மிதாலி ராஜ் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

39 வயதான மிதாலி ராஜ் ருவிட்டர் பதிவொன்றின் மூலம் தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

“இந்திய மகளிர் அணியில் மிகச்சிறந்த திறமை கொண்ட இளம் வீராங்கனைகள் உள்ளதாலும் இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலம் ஒளிமயமானதாக காணப்படுவதாலும் எனது சர்வதேச கிரிக்கெட் வாழ்வை முடித்துக் கொள்வதற்கான உகந்த நேரம் இதுவென கருதுகிறேன்”, என அவர் பதிவிட்டுள்ளார்.

எதிர்கால திட்டம் குறித்து அவர் எதனையும் தெரிவிக்காத போதிலும் கிரிக்கெட்டுடன் தொடர்ந்தும் நெருக்கமாகயிருக்கப்போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மிதாலி ராஜ் 12 டெஸ்ட் போட்டிகளிலும் 232 ஒருநாள் போட்டிகளிலும் 89 இருபது - 20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார். ஒருநாள் போட்டிகளில் ஏழு சதங்கள் உட்பட 7,805 ஓட்டங்களை அவர் பெற்றுள்ளார். மூன்று வகைபோட்டிகளிலும் விளையாடி 10,868 ஓட்டங்களை மிதாலி ராஜ் பெற்றுள்ளார்.

சர்வதேச அளவில் அதிக ஓட்டங்களை பெற்ற வீராங்கனை இவராவார். அத்துடன், தொடர்ச்சியாக ஏழு அரைச்சதங்கள் பெற்ற வீராங்கனை என்ற பெருமைக்குரியவர் மிதாலி என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோலியை தொடரும் 20 கோடி ரசிகர்கள்!

சென்னை, ஜூன் 09

சமூகவலைத்தளமான இன்ஸ்ட்ராகிராமில் 20 கோடி பின்தொடர்வோரை பெற்றுள்ளார் இந்தியாவின் விராட் கோலி. இதன் மூலம் இன்ஸ்ட்ராகிராமில் அதிக பின்தொடர்பவர்களைப் பெற்ற முதல் இந்தியர் ஆகியுள்ளார் அவர்.

பிரபல சமூகவலைத்தள நிறுவனமான இன்ஸ்ட்ராகிராமை அதிகளவானனோர் பயன்படுத்துகின்றனர். புகைப்படங்களைப் பகிர்வதற்கு புகழ்பெற்ற வலைத்தளமான இதில் பல பிரபலங்களும் தங்கள் படங்களை பதிவிட்டு வருகின்றனர். இதில் அதிகம் செயல்படும் பிரபலங்களுக்கு அதிக பின்தொடர்பவர்களும் கிடைப்பார்கள்.

இந்த வகையிலேயே, இந்திய கிரிக்கெட் வீரரான கோலி 20 கோடி பின்தொடர்பவர்களைப் பெற்றுள்ளார். விளையாட்டுலகில் ரொனால்டோ, மெஸ்ஸிக்கு அடுத்து 200 மில்லியன் பின்தொடர்பவர்களை பெற்ற மூன்றாவது வீரராகவும் கோலி மாறியுள்ளார். (ஐ)





# ரென்னிஸ் தரவரிசை; நடால் முன்னேற்றம்!

லண்டன், ஜூன் 09

சர்வதேச ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலை ஏ. ரி. பி. வெளியிட்டுள்ளது. இதில், சமீபத்தில் 14ஆவது முறையாக பிரெஞ்சு ஓப்பனை வென்ற ஸ்பெயினின் ரபேல் நடால் 5ஆவது இடத்தில் இருந்து 4ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இந்தத் தொடரில் இறுதிப் போட்டி வரை சென்றிருந்த நோர்வேயின் காஸ்பர் ரூட் 2 இடங்கள் முன்னேற்றம் கண்டு 6ஆவது இடத்தை பிடித்துள்ளார். பிரெஞ்சு ஓப்பனில் காலிறுதி சுற்றில் ரபேல் நடாலிடம் வீழ்ந்த போதிலும் சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் 8,770 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துகிறார்.

இதேபோன்று அரையிறுதியுடன் வெளியேறிய ரஷ்யாவின் டானியல் மெத்வதேவ் 8,160 புள்ளிகளுடன் 2ஆம் இடத்திலும், ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரேவ் 7,795 புள்ளிகளுடன் 3ஆம் இடத்திலும் தொடர்கின்றனர். (ஐ)

### நேஷன்ஸ் லீக் உதைபந்தாட்டம்;

# பிரான்ஸ் - குரோஷியா போட்டி சமநிலையில்!



ஸ்ப்லிட், ஜூன் 09

பிரான்ஸ் - குரோஷியா அணிகள் மோதிய போட்டி 1 - 1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்மேளனம் நேஷன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடரை நடத்து கிறது.

இந்தத் தொடரில், முதல் போட்டியில் டென் மார்க்கிடம் தோல்வி யடைந்த பிரான்ஸ், இந்தப் போட்டியில் வெற்றியை நோக்கி மீள்வதற்குக் கடும் முனைப்புக் காட்டினாலும், அதை கட்டுப்படுத்தியது குரோஷியா.

கடந்த 11 ஆண்டுகளில் பிரான்ஸூக்கு எதிரான போட்டியில் குரோஷியா தோல்வியை சந்திக்காதது இதுவே முதல் முறையாகும்.

அந்நாட்டின் ஸ்ப்லிட் நகரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போட்டியில் பிரான்ஸ் தான் முதலில் கோலடித்தது. முதல் பாதி கோலின்றி நிறைவடைய, 2ஆவது பாதியில் அந்த அணியின் அட்ரியன் ரேபியோட் 52ஆவது நிமிடத்தில் கோலடித்தார்.

என்றாலும், குரோஷியா அணிக்காக மேலதிக வீரராகக் களமிறங்கிய அந்த்ரே கிரமாரிக் 83ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்டனை உதை வாய்ப்பில் அசத்தலாக கோல் அடித்து போட்டியை சமன் செய்தார்.

பிரான்ஸின் முக்கிய வீரரான கைலியன் எம்பாப்பே, டென்மார்க்குக்கு எதிரான போட்டியில் காயமடைந்த தால் இந்தப் போட்டியில் பங்கேற்கவில்லை. (ஐ)



## உலக சமுத்திர தினத்தையொட்டி மன்னார் கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் நிகழ்வு

மன்னார், ஜூன் 09

உலக சமுத்திர தினத்தை சிறப்பிக்கும் முகமாக கடல் வளங்களை பாதுகாக்கும் கருப்பொருளுக்கு அமைய மன்னார் தோட்டவெளி கடற்கரைப் பகுதியில் தூய்மைப் படுத்தும் நிகழ்வு நேற்று புதன் கிழமை காலை இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஒழுங்கமைப்பில் இடம் பெற்ற கடற்கரை தூய்மையாக்கல் நிகழ்வில் அப்பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு தூய்மையாக்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் கடல் சூழல் பாதிப்பு மற்றும் கடல் வள முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வு மக்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மரண அறிவித்தல்



மலர்வு 19 - 04 - 1970

உதிர்வு 06 - 06 - 2022

### தர்மராஜா சேவியர் இந்திரராஜன்

(பொறியியலாளர் - பேராதனை பல்கலை கழகம்)

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், கண்டியை வதிவிடமாகவும் கொண்ட தர்மராஜா சேவியர் இந்திரராஜன் அவர்கள் 06.06.2022 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற ஜே. என். தர்மராஜா, ரீற்றா தர்மராஜா தம்பதிகளின் அன்பு மகனும்,லக்ஷனா இந்திரராஜன் அவர்களின் அன்பு கணவரும்,ஜோஷ்வா இந்திரராஜன், ஜோன் இந்திரராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,காலஞ்சென்ற அன்ரன் செபஸ்ரியன் மற்றும் ரதி செபஸ்ரியன் ஆகியோரின் அன்பு மருமகனும், இன்பராஜன்(கனடா), சத்தியபாமா, இந்திரரூபன், ரேணுகா(கனடா), மிதிலா, கவிதா(ஓமான்) ஆகியோரின் அன்புச் சகோதரனும்,சாதனா அழகக்கோன், காஞ்சனா றோஹான்(கனடா), ஜோர்ஜ் செபஸ்ரியன் (கனடா), ரொஹிந்திரா, றோஹான், ஜஸ்ப்ரீத் சித்து, ஆகியோரின் அன்பு மைத்துனரும்,கௌரி, தேவராஜன், மானெல், அகஸ்ரின் ஜெகசோதி, கிளெமென்ஸ், அஞ்சலோ ஆகியோரின் அன்பு மைத்துனரும், திவ்யா, ஷரோமி, ராகுல், ஜெஷ்ரன், ஜெஷானியா, ஜொனாதன், மார்ஷல், ட்ரெவோன், ஹேய்லி, செல்சி ஆகியோரின் அன்பு மாமனாரும்,அன்ரன், ஜொனாதன், ஜோசப், ஜெரோம் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 11.06.2022 சனிக்கிழமை அன்று பி.ப 02:30 மணியளவில் திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் இடம்பெற்று பின்னர் கத்தோலிக்க சேமக்காலையில் திருவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
**இன்பராஜன் - சகோதரன்** Mobile : +14167376811
**இந்திரரூபன் - சகோதரன்** Mobile : +94777791163
**அகஸ்ரின் ஜெகசோதி - மைத்துனர்** Mobile : +16479968342
**மிதிலா இம்மானுவேல் - சகோதரி** Mobile : +94777066074
**அஞ்சலோ - மைத்துனர்** Mobile : +96893901251
**சாதனா அழகக்கோன் - மைத்துனி** Mobile : +94774018074
**ஜோர்ஜ் செபஸ்ரியன் - மைத்துனர்** Mobile : +16473272330

# விறகு பயன்படுத்தும் நம் நாட்டு பெண்களின் ஆயுட்காலம் அதிகம்

### கூறுகின்றார் சரத் வீரசேகர

கொழும்பு, ஜூன் 09

நவீன மற்றும் சுத்தமான வலுசக்தியை பயன்படுத்தும் வளர்முக நாடுகளில் உள்ள ஆண்களின் ஆயுட்காலத்தை காட்டிலும் விறகு பயன்படுத்தும் இந்நாட்டு பெண்களின் ஆயுட்காலம் அதிகம் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

”நவீன சுத்தமான எரிசக்தியை பயன்படுத்தும் செல்வந்த நாடுகளில், தனிமனித ஆயுட்காலம் சராசரியாக 80 மற்றும் 85 ஆண்டுகள் ஆகும்.

எரிவாயு கொள்வனவு செய்ய சிரமப்படும், விறகுகளை பயன்படுத்தும் இலங்கை பெண்களின் ஆயுட்காலம் சராசரியாக 80.1 ஆண்டுகளாகும். இதனூடாக, விறகுகளை பயன்படுத்துவது நாட்டின் வளர்ச்சிக்காகவே தவிர சீரழிவுக்காக அல்லவென இதனூடாக புலப்படுகிறது-என்றார் அவர். (அ)

## மருந்து விநியோகம் ஓகஸ்ட் மாதம் முதல் ஆரம்பிக்கப்படும்

கொழும்பு, ஜூன் 09

வழமை போன்று இலங்கைக்கான மருந்து விநியோகம் ஓகஸ்ட் மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

எனவே அடுத்த இரண்டு மாதங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அக்காலப்பகுதியில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களை அன்பளிப்பாளர்களின் ஊடாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என வைத்தியர் அசேல குணவர்தன கூறினார்.

இதேவேளை, மருந்துகள் தட்டுப்பாடு காரணமாக வீடுகளில் செல்லப்பிராணிகளால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.(அ)

## யாழ்ப்பாணத்தில் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ். மாவட்டத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் அத்தியாவசிய பொருட்களை விலை கூட்டி விற்றல் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை விற்பனை செய்யாது சேமித்து வைத்திருத்தல் போன்ற குற்றச்சாட்டுக்கள் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்புரையின் கீழ் யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் நேற்று சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இணைப்பாளர் விஜிதரனின் நெறிப்படுத்தலில் யாழ். குடாநாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் சோதனையிடப்பட்டதோடு எரிபொருள் விற்பனை நிலையங்களின் எரிபொருள் கொள்கலன்களும் கண்காணிக்கப்பட்டன. (அ)

## தாத்தா, மாமா, சகோதரனால் சிறுமி துஷ்பிரயோகம்!

கொழும்பு, ஜூன் 09

13 வயது சிறுமியை அவரின், தாத்தா, தாய் மாமன், மூத்த சகோதரனால் தொடர்ச்சியாக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி வந்தமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் மொனராகலை எதிமலே என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

குறித்த சிறுமி வயிற்றுவலி காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அப்போது, அவர் கர்ப்பமாக இருப்பது தெரிய வந்தது. இதையடுத்து, தொடரப்பட்ட விசாரணைகளிலேயே சிறுமி தாத்தா, தாய் மாமன், சகோதரனால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டமை தெரிய வந்தது. இதையடுத்து, சிறுமியை துஷ்பிரயோகம் செய்த அனைவரையும் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்று அறிய வருகின்றது. (ஐ)

## மின்சார சபை பொறியிலாளர்கள் நேற்று முதல் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜூன் 09

இலங்கை மின்சார சபை பொறியிலாளர்கள் சங்கம் நேற்று நள்ளிரவு முதல் தொடர்ந்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளது.

பாதகமான வகையில் மின்சார சட்டம் திருத்தப்படுகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, இவ்வாறு பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அந்த சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் இந்துவர குறிப்பிட்டார். 1996ஆம் ஆண்டுக்கு பின்னர் இவ்வாறு பணிப்புறக் கணிப்பு நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

## பொருளாதார நெருக்கடிக்கு தூதரகங்கள் ஊடாக தீர்வு!

கொழும்பு, ஜூன் 09

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் குறித்து கலந்துரையாடி, வெளிநாடுகளிலுள்ள தூதரகங்கள் மூலமாக தீர்வுகளை நாடும் வகையில், வெளிவிவகார அமைச்ர் ஜீ. எல். பீரிஸ், மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, வெளிவிவகார செயலாளர் அருணி விஜயவர்த்தன மற்றும் அனைத்து வெளிநாட்டு தூதரகங்களின் தலைவர்களுடன் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இதன் போது கருத்து வெளியிட்ட அமைச்சர் பீரிஸ்,

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் அரசாங்கம் எதிர்கொள்ளும் சிரமங்களை எடுத்துரைத்ததுடன், முதலீடுகள், வர்த்தகம் மற்றும் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கான விரிவான பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களினதும் பிரதான செயல்பாடுகள் பொருளாதார இராஜதந்திரத்தை ஊக்குவிப்பதாக அமைய வேண்டும் எனக் குறிப்பிட் டார்.

மத்திய வங்கி ஆளுநர் கருத்து வெளியிடுகையில், பொருளாதார இராஜதந்திரத்தை மேம்படுத்துவதற்கான முன்னோக்கிச் செல்லும் வழிகள் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்கள் இது தொடர்பான தமது முயற்சிகளை தொடர்ந்து ஊக்குவிக்கக்கூடிய பகுதிகள் குறித்து விரிவாக விளக்கினார்.

வெளிநாட்டு தூதரகங்களால் முன்மொழியப்பட்ட பொருளாதார இராஜதந்திர முயற்சிகள் குறித்து மத்திய வங்கி, நிதி அமைச்சு மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கு இடையே ஓர் உரையாடலை உருவாக்குவதற்கு இன்றைய கலந்துரையாடல் முயற்சி அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார செயலாளர் தெரிவித்தார்.

வெளிநாட்டுத் தூதரகங்கள் பொருளாதார இராஜதந்திரத்தை மேம்படுத்துவதற்கு எடுத்துள்ள அனைத்து முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் பாராட்டிய அமைச்சர் பீரிஸ், இலங்கை மத்திய வங்கிக்கும் நிதியமைச்சுக்கும் இடையிலான பேச்சுக்கு அமைச்சு தொடர்ந்தும் உதவுவதாகத் தெரிவித்தார்.

## மின்சார...

அறிவித்தல் வெளியாகியுள்ளது.

1979ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் 2ஆம் பிரிவுக்கு அமைய ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களை மையப்படுத்தி இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, மின்சாரம் வழங்கல், மருத்துவ சேவைகளை வழங்குவதில் ஈடுபடும் எந்தவொரு அரச கூட்டுத்தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச் சங்கம் அல்லது அவற்றின் கிளை ஒன்றால் வழங்கப்படும் சேவைகள் வழமையான பொதுமக்கள் வாழ்வை கொண்டு நடத்துவதற்கு இன்றியமையாதன. எனவே மேற்கூறப்பட்டுள்ள சேவைகளுக்கு இடையூறாகக்கூடுமென அல்லது தடையாகக்கூடுமென்பதைக் கருத்தில் கொண்டு எந்தவோர் அரச கூட்டுத் தாபனம் அல்லது அரச திணைக்களம் அல்லது உள்ளூராட்சி நிறுவனம் அல்லது கூட்டுறவுச்சங்கம் அல்லது அவற்றின் கிளை ஒன்றின் மூலம் வழங்கப்படும் பின் வரும் சேவைகள் அத்தியாவசிய சேவைகள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மின்சாரம் வழங்கல், வைத்தியசாலைகள் - நேர்சிங் ஹோம்கள், மருந்தகங்கள் மற்றும் அது போன்ற ஏனைய நிறுவனங்களில் நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பாதுகாப்பு, போசாக்கூட்டல் மற்றும் சிகிச்சை அளித்தல் ஆகியவை தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது தேவைப்படும் எந்தவகையிலான சகல சேவைகள், வேலைகள் அல்லது தொழில் பங்களிப்பு - என்றுள்ளது. (ஐ)

## பதவி துறக்கிறார்...

மன்ற தேர்தலில் போட்டியிட முடியாத நிலை காணப்பட்டது. 20ஆம் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கான தடை நீக்கப்பட்டு தேசியப் பட்டியல் மூலம் அவர் பாராளு மன்ற உறுப்புரிமையைப் பெற்றார். இதை யடுத்து கடந்த ஆண்டு ஜூலை 8 ஆம் திகதி எம். பியான அவர் நிதியமைச்சராக வும் பதவியேற்றார்.

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளை தொடர்ந்து அவரை பதவி விலகுமாறு வலியுறுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, அவர் கடந்த ஏப்ரல் 3ஆம் திகதி நிதியமைச்சு பதவியை துறந்தார். இந்த நிலையில், 21ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்கள் பாராளுமன்ற உறுப்புரிமையை பெறுவதற்கு தடை விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 21ஆம் திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் குழப்பங்கள் காணப்படுகின்றன. இந்நிலையிலேயே அவர் பாராளுமன்ற உறுப்புரிமையை துறக்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது. இதையடுத்து, இந்த வார இறுதியில் அமெரிக்கா செல்லும் அவர் மீண்டும் நாடு திரும்புவார் என்றும், இதைத் தொடர்ந்து கட்சியை மறுசீரமைப்பதுடன் - முழுநேர அரசியலிலும் ஈடுபடுவார் என்றும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஐ)

## யாழ். வரும்...

பாதியாகக் கொண்ட பொதுக் கொள்கை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடப்படுகிறது. இவ்வாறான பொதுவான கொள்கை வகுக்கப்படாவிட்டால், சேவையில் ஈடுபடும் தொடருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

டீசல் விலை உயர்வால் தொடருந்து கட்டணமும் உயர்ந்துள்ளது. டீசல் விலை அதிகமாக இருப்பதால் புகையிரதத்தை இயக்குவதற்கான கட்டணமும் அதிகம். கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரை ஒரு புகையிரதத்தை இயக்குவதற்கு சுமார் 13 இலட்சம் ரூபாய் செலவாகும். அந்தப் புகையிரதத்தில் சுமார் 500 பயணிகள் பயணித்தாலும் 10 இலட்சம் ரூபாயே வருமானம் கிடைக்கிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்படி, யாழ்ப்பாணம் செல்லும் ஒவ்வொரு புகையிரதத்தின் மூலமும் 3 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்படுகிறது - என்றார்.

கொழும்பு மாவட்ட பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலவத்த எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார். (ஐ)

## நாட்டின்...

மலையகத்திலுள்ள காணிகளில் பயிரிட இடமளிக்க வேண்டுமென மனோ கணேசன் எம். பி. பிரதமரிடம் கோரினார்.

மலைய மக்களின் வாழ்க்கை நிலை மோசமாக உள்ளது. எரிவாயுக்கும் மண்ணெண்ணெய்க்கும் மக்கள் வரிசையில் நிற்கின்றனர். மலையக மக்கள் பட்டினியை நோக்கி நகர்கின்றனர். அவர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. சுய ஆதிக்கத்துடன் உழைப்பவர்கள் அவர்கள். அவர்களுக்கு பயிரிட நிலங்களை வழங்குங்கள். 200 ஆண்டுகளுக்கு மேலாக உழைக்கும் அந்த மக்களுக்கு ஜனாதிபதியும், பிரதமரும் காணிகளை வழங்கினால் அவர்கள் நாட்டுக்குத் தேவையான உணவை தருவார்கள். பொருளாதாரத்தை நிமிர்த்துவார்கள். மனோ கணேசனின் கோரிக்கை நியாயமானது.

அடுத்து வடக்கு, கிழக்கில் குறிப்பாக வன்னியில் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பட்டினியால் ஒருகாலத்திலும் அந்த மக்கள் சாகவில்லை. 13 இலட்சம் புலம்பெயர் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நாட்டின் 50 ஆயிரம் மில்லியன் ரூபாய் கடனை செலுத்த தயாராக வந்தால் வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் அரசியல் தீர்வை பெற்றுத் தர அரசு தயாரா? அரசியல் ஸ்திரத்தன்மையை கட்டியெழுப்ப தயாராக இருக்கிறார்கள் - என்றார். (ஐ)

## பாராளுமன்ற...

மன்றம் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் கொண்டது. சுயாதீனமாக இயங்கும் எம். பிக்களை அல்ல. இங்கே அமர்ந்திருக்கும் அனைவரும் சுயாதீனமாக இயங்கும் எம். பிக்கள் என்று கூறினால் இந்தப் பாராளுமன்றம் தோல்வியடைந்துவிட்டது. அது எங்கள் அமைப்புமுறை அல்ல.

பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர் இன்னும் ஜனாதிபதியாகவே இருக்கிறார். நெருக்கடியை சமாளிக்க பொறுப்பான நபர் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## மின் தடை...

ளுமன்றில் முன்வைக்கப்படுகின்றது. இதில், உள்ளடங்கும் சில விடயங்கள் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்தே இந்த வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பில், மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவுடன் இடம்பெற்ற பேச்சு தோல்வியில் முடிவடைந்தது. இதையடுத்தே, மின்சார சபை பொறியியலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

இவர்களின் வேலை நிறுத்தம் காரணமாக பாதுகாப்புக் கருதி மின் உற்பத்தி நிலையங்கள் நள்ளிரவு முதல் மூடத் தீர்மானிக்கப்பட்டன.

இதன் காரணமாக, இன்று காலை முதல் நாடளாவிய ரீதியில் மின்சாரம் தடைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# யாழ். பல்கலை. - தொழில்துறை மன்றம் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒப்பம்!




யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடமும், யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில் துறை மன்றமும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் மூலம் இணைந்துள்ளன.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று புதன்கிழமை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றம், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர்கள், விரிவுரையாளர்கள் போன்றவர்களுக்கும் பல்வேறு வழிகளில் நன்மைகளை ஏற்படுத்தும். இதன் மூலம், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடமானது யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில் துறை மன்றத்தின் நிலைபேறான அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பை வழங்க முடியும்.

யாழ்ப்பாணம் வர்த்தக தொழில் துறை மன்றத்தின் அங்கத்தவர்களுக்கு தேவையான பயிற்சிகள், பயிற்சிப் பட்டறைகள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், போன்றனவற்றுக்கு வளவாளர்களாக முகாமைத்துவ வணிக பீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் தொழில்படுவதுடன் கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்களை வகுப்பதில் உதவுதல். குறுகியகால டிப்ளோமா, மற்றும் சான்றிதழ் கற்கைகளை அறிமுகப்படுத்துதல் மூலமாக அங்கத்தவர்களின் தொழில் சார் அறிவைப் பெருக்கி கொள்ள உதவுதல். தொழில் துறை நடவடிக்கைகளில் ஏற்படுகின்ற நெருக்கடி நிலையை சிறந்த முறையில் முகாமை செய்வதற்குரிய தந்திரோபாய ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பங்குதாரர்களாக செயல்படுதல் வணிகத்தின் வளர்ச்சி ஆராய்ச்சிகள் ஆலோசனைகள் முதன்மையான இடத்தை வகிக்கின்றது. இவ்வாறான ஆலோசனைகள் தேவைப்படும்போது முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் நிபுணர் குழு தேவையான ஆலோசனைகளை வணிக குழாமுக்கு வழங்குவதன் மூலம் தொழில்துறையின் செயல்பாட்டை மேம்படுத்த உதவும்.

இதேபோல இந்த உடன்படிக்கையின் மூலம் மாணவர் சமூகம் பல்வேறு வழிகளில் நன்மைகளைப் பெற்று கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன. மாணவர்களுக்கு தமது பட்டப்படிப்பின் ஓர் அங்கமாக அமைந்துள்ள உள்ளகப் பயிற்சிக்கான வாய்ப்பைபெற்று கொள்ளவும். மாணவர்களுக்கு பகுதி-நேர வேலை வாய்ப்பை வழங்கி உதவுதல். யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில் துறை மன்றம் செயல்படுத்தும் செயல் திட்டங்களில் மாணவர்கள் நேரடியாக பங்குபற்றி பயிற்சிகளை பெற்றுக்கொள்வதன் வழியாக மாணவர்கள் தங்கள் நடைமுறை அறிவை விருத்தி செய்து கொள்வதுடன் விழிப்புணர்வையும் பெற்றுக்கொள்வர்.

சில மாணவர்கள் தொழில் முயற்சியாளர்களாக காணப்படுவதனால் இத்தகைய மாணவர்களின் பங்குபற்றுதல், உள்நாட்டு மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும், புதிய உற்பத்திகளுக்கு அங்கீகாரம் பெற வழிசெய்யும். இதனால் மாணவர்கள் தமது உற்பத்திகளுக்கு அதிக சந்தை வாய்ப்புக்களைப் பெறுவார்கள்.

மேலும், யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றமும் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடமும் ஒன்றிணைந்து வணிகக் கண்காட்சியை எதிர்காலத்தில் ஏற்பாடு செய்வதுடன் தொடர்ச்சியாக இரு அமைப்புகளும் சேர்ந்து தொழில்முயற்சி விழிப்புணர்வை மக்கள் மத்தியிலும் மாணவர் சமூகத்துக்கு இடையேயும் ஏற்படுத்துவதிலும் கவனம் செலுத்தவுள்ளன. (ஐ-3)

## 3900 தொன்...

தொடர்ச்சியாக எரிவாயுவை விநியோகிக்க முடியும் என லிட்ரோ நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## நாட்டைவிட்டு...

என்ற காரணத்தைச் சொல்லி சந்தேக நபர்களுக்கு நாட்டிலிருந்து தப்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இலங்கையிலிருந்து எவரும் சட்டவிரோதமாக வெளியேற வேண்டாம் என்று அரசு கேட்டுக்கொள்கின்றது.

இங்குள்ள நிலைமை அவ்வளவுக்கு மோசமடையவில்லை. பொருளாதாரப் பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்படும்” - என்றார்.

இதேவேளை, சட்டவிரோதமாகவும் மிகவும் ஆபத்தான வகையிலும் நாட்டிலிருந்து வெளியேற்ற முயலும் ஆட்கடத்தல்காரர்களுக்கு இரையாகி தமது உயிர்களையும் உடைமைகளையும் பணயம் வைப்பதைத் தவிர்க்குமாறும் பொதுமக்களை கடற்படை கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், இதற்காகப் பயன்படுத்தப்படும் படகுகள் காலாவதியான மீன்பிடிப் படகுகள் எனவும், அவற்றின் ஊடாக சட்டவிரோதமாக குடிபெயர முற்படுவது அதிக ஆபத்தை ஏற்படுத்தும் எனவும் கடற்படை எச்சரித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu







## மரண அறிவித்தல்



தோற்றம் 19 - 12 - 1966

மறைவு 05 - 06 - 2022

*நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்*
*- யோவான்: 11:25*

### அருள்தாசன் யேசுதாசன்
**(அருள், ஜோன்சன்)**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, சுவிஸ் Zürich ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட அருள்தாசன் யேசுதாசன் அவர்கள் 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சுவாந்தக்குரூஸ் யேசுதாசன், பெலிசிற்றம்மா(கனகமணி) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பீற்றர் பொங்கலன் (கிப்சலா தச்சுத்தொழிற்சாலை - யாழ்ப்பாணம்), அன்ரனிஅம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கிப்சலா அவர்களின் அன்புக் கணவரும், ஜெனிபர் அவர்களின் அன்புத் தந்தையும், சேவியர், லில்லி, ஜெறோவா, டயஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனிஸ்ரா, நகுநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு:
Wednesday, 08 Jun 2022 11:00 AM - 4:30 PM
Thursday, 09 Jun 2022 11:00 AM - 4:30 PM
Friday, 10 Jun 2022 11:00 AM - 4:30 PM
Saturday, 11 Jun 2022 9:00 AM - 11:30 AM
Sunday, 12 Jun 2022 9:00 AM - 11:30 AM
Krematorium Nordheim Käferholzstrasse 101, 8046 Zürich, Switzerland

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**Bro. யோபு றவி - உறவினர்**

தொடர்புகளுக்கு:
**கிப்சலா - மனைவி** Mobile : +41797738561
**Bro. யோபு றவி - உறவினர்** Mobile : +41763057336
**விதியா - உறவினர்** Mobile : +41795014121

# மின்சார சபைக்கு ரணில் எச்சரிக்கை!



*கொழும்பு, ஜூன் 09*

இலங்கை மின்சார சபையின் ஊழியர்களை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவேண்டாமென தெரிவித்த பிரதமர் ரணில் விக்ரமசிங்க, அவ்வாறு செய்தால் இலங்கைக்கு எரிபொருளை பெற்றுக் கொள்ள இந்தியா உதவுமென உறுதியளிக்க முடியாது என எச்சரித்தார்.

இலங்கைக்கு எரிபொருள் மற்றும் நிலக்கரி கொள்வனவு செய்வதற்கு இந்தியா மட்டுமே உதவுவதாகவும் இவற்றை இலங்கைக்கு கொள்வனவு செய்வதற்கு வேறு எந்த நாடும் உதவவில்லை எனவும் பிரதமர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், “எரிபொருள் மற்றும் நிலக்கரி வாங்குவதற்கு எந்த நாடும் எங்களுக்கு உதவவில்லை. உணவு, மருந்து, உரம் வாங்க உதவுவார்கள்.

எரிபொருள் மற்றும் நிலக்கரி வாங்குவதற்கு இந்தியா மட்டுமே எங்களுக்கு உதவுகிறது. தற்போது இந்திய கடன் வரம்பு மீறப்பட்டுள்ளது.

விரைவில் இந்த வசதியை நீடிக்க அவர்களுடன் பேச்சு நடத்தி வருகிறோம். எங்களுக்கு எரிபொருள் மற்றும் மின்சாரம் தேவை.

நான் உங்களை எச்சரிக்கிறேன். நீங்கள் ஒரு இருட்டடிப்புக்கு சென்றால், உதவிக்காக இந்தியாவுக்குச் செல்லும்படி என்னைக் கேட்கவேண்டாம்.

அவர்கள் தெருக்களில் இறங்கிப் போராடலாம். ஆனால், மின்வெட்டுக்கு செல்லவேண்டாம்.

முன்மொழியப்பட்ட சட்டமூலம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களில் கோரப்படாத முன்மொழிவுகளை அனுமதிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தியாவுக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையை வழங்குவதற்காக இந்த சட்டமூலத்தை நாங்கள் நிறைவேற்றவில்லை-என்றார். (அ)



## காத்தான்குடி பிரதேச செயலர் பிரிவில் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கல்

*மட்டக்களப்பு, ஜூன் 09*

காத்தான்குடி - 165 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமுர்த்தி பயனாளிகளுக்கும், சமுர்த்தி காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்குமான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எச்.எம்.தாஹிர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ.உதயசிறீதர் கலந்துகொண்டு உரையாற்றுகையில்-

நாட்டின் தற்போதய நெருக்கடி மற்றும் உணவுத் தட்டுபாடு போன்றன மேலும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆகவே இந்த சவாலை எதிர்கொள்ள தங்களால் இயன்ற பயிர்களை பயிரிட்டு

வர இருக்கும் பஞ்சத்தை அனைவரும் இணைந்து வெற்றி கொள்ள செயற்படவேண்டும்-என்றார்.

இந்நிகழ்வில் கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.எம்.ஜரூப், சமுர்த்தி முகாமையாளர் எஸ்.எச்.முஸம்மில், கிராம உத்தியோகத்தர் சாதினா,

பொருளாதார உத்தியோகத்தர் சத்யா மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# கச்சதீவை இந்தியாவுக்கு ஒருபோதும் வழங்கக்கூடாது

### தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம்

*யாழ்ப்பாணம், ஜூன் 09*

கச்சத்தீவை இந்தியாவுக்கு கொடுக்கும் எந்த ஒரு முடிவையும் இலங்கை அரசாங்கம் எடுக்க கூடாதென தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் கோரியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் நேற்று மீனவர் அமைப்புகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், நாடு பொருளாதார ரீதியாக பின்னடைந்து இருக்கின்ற நிலையில் நாட்டின் பகுதிகளை வேறு நாடுகளுக்கு விற்பனைக்கோ குத்தகைக்கு வழங்குகின்ற செயல்பாடுகளை செய்ய வேண்டாம்.

கடற்றொழிலாளர்கள் மண்ணெண்ணையை பெறுவதில் உள்ள சிக்கல்கள் தொடர்பாக இந்த கலந்துரையாடப்பட்டதுடன் இது தொடர்பில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 31 - 03 - 1961

மறைவு 05 - 06 - 2022

### அரியரத்தினம் பத்மநாதன்

கிளிநொச்சி உருத்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ். மண்டைதீவு, ஜேர்மனி Mönchengladbach ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், தற்பொழுது பிரித்தானியா இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட அரியரத்தினம் பத்மநாதன் அவர்கள் 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான அரியரத்தினம் தர்மலட்சுமி தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்ற வினாயகரெத்தினம், காந்தமலர் தம்பதிகளின் மருமகனும்,ரோகிணி(வசந்தி) அவர்களின் ஆருயிர்க் கணவரும்,மிலானி, மிதுர்ஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,ராகுலன் அவர்களின் அன்பு மாமனாரும், கமலேஸ்வரி அவர்களின் பெறாமகனும்,சிவபாலன் சிவனேசமலர் தம்பதிகளின் சம்மந்தியும்,உமாதேவி, காலஞ்சென்றவர்களான யோகநாதன், சித்ரா மற்றும் கலாதேவி, லோகநாதன், ஜெகநாதன், சறோசா ஆகியோரின் அன்புச் சகோதரரும்,சாந்தினி, நந்தினி, நளாயினி, இளங்கோ, சுலோஜினி, வினோதினி ஆகியோரின் அருமை மைத்துனரும்,உதயகுமார், உஷானந்தன், காலஞ்சென்றவர்களான உதயராஜன், உமாரமணன், நிஷாந், நவீனா, நித்தியா, அனுசன், அனுசியா, அதீனா, லாவண்யா, நதியா, றமணிகரன், அபிரா, அக்ஷயா, ஐஸ்வர்யா ஆகியோரின் அன்பு மாமனாரும், சயந்தினி, காலஞ்சென்ற ராஜ்குமார், ரஜித்குமார், ரஞ்சித்குமார், நிரோஜினி, ரதீஸ்குமார், ரவிகுமார், ஜீவா, ஜெனிஸ், ஜனனி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், சர்மிலன், மினிஜா, ராஜிகா, ஆரபி, சமரன், சயானா, சஹானா, சரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சிவா - சகலன்**

தொடர்புகளுக்கு:
**வசந்தி நாதன் - மனைவி** Mobile : +447522151987
**மிலானி ராகுலன் - மகள்** Mobile : +447808166331
**ராகுலன் - மருமகன்** Mobile : +447446964554
**சிவா - சகலன்** Mobile : +447888665576

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-அரண்மனை, நய்யாண்டி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை-நெஞ்சுக்கு நீதி




**இரவு**

7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்-இசை நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு